விலை ரூபா 2-00 ★

12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 புரட்டாதி 20 முஹறம் 20 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (6—10—85) இதழ் 238

### அகதிக் குழந்தைகள்

## பாலுணவின்றித்தவிப்பு! உதவும்படி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பகுதியிலும், யாழ்மாவட்டத்துக்கு வெளியேயுள்ள ஏனைய இடங்களிலுமிருந்து வட பகுதிக்கு அகதிகளாக வந்துள்ள பல சிறுகுழந்தைகள் பாலுணவின்றித் தவிக்கின்றனர்.

வடபகுதி அகதிமுகாம்களிலுள்ள குழந்தைகளின் நலனைக் கருதி (12ம் பக்கம் பார்க்க)

● வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்படுத்தாத

# செயல்திட்ட அறிக்கைகுறித்து கூட்டணி-ஈ.தே.வி.மு. அதிருப்தி

UNIVERSITY OF JAFFNA
RECEIVED
07-10-1985
PERIODICALS DIVISION
LIBRARY

## புதிய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது!!

(பெ. இராசரத்தினம்)

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசு முன்வைத்துள்ள செயல்திட்ட அறிக்கை குறித்து ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழர்விடுதலைக்கூட்டணி ஆகியன அதிருப்தி தெரிவித்துள்ளன. அத்துடன் இந்த அறிக்கையை ஏற்க அவை மறுத்துள்ளன வென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்பிரதேசங்களானவடக்கு, கிழக்கு இணைப்புக்குறித்து இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆகையினாலேயே தமிழ்க்குழுக்கள் இது குறித்து அதிருப்தியடைந்துள்ளன.

சென்னையிலுள்ள இலங்கை வட்டாரங்கள் மேற்கண்டவைத் தமிழ்க்குழு அரசியல் தகவலை வெளியிட்டன. இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக வடக்கு—கிழக்கு தமிழ்ப்பிரதேசங்கள் ஒன்றிணைந்த ஒரு தீர்வையே இலங்கைத்தமிழ்க்குழுக்கள் எதிர்பார்க்கின்றன. ஆனால் இது விடயத்தில் இலங்கை அரசு தொடர்ந்தும் தயக்கம்காட்டியே வருகின்றது.

இனப்பிரச்னை தொடர்பான மூன்றாம் கட்டப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இலங்கை அரசு செயல்

(12ம் பக்கம் பார்க்க)

### திருமலை தமிழ் அரச

## ஊழியர்கள் வசதியீனம் ஜனாதிபதிக்குத் தந்தி!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் பாதிக்கப்பட்ட சுமார் 300 தமிழ் அரசாங்க ஊழியர்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள காரியாலயங்களிலும், அரசாங்கச் செயலகத்திலும் கைமுந்திட வசதியளிக்க வேண்டும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு யாழ். பிரஜைகள் குழு செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: திருமலையில் கடமையாற்றிய சுமார் 300 தமிழ் அரசாங்க ஊழியர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து, திருமலை சென்று வேலைசெய்ய முடியாத நிலையில் உள்ளனர். அவர்களை இதுவரை யாழ் அரசாங்க அலுவலகங்களிலும், கச்சேரியிலும் சென்று கையெழுத்திட அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், அவர்களுக்கு இதுவரை கொடுக்கப்பட்ட வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன.

திருமலையிலிருந்து இப்போது தினமும் அகதிகள் யாழ்ப்பா

(12ம் பக்கம் பார்க்க)

### உபகரணங்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நீர் வழங்கல் வடிகால் சபையின் யாழ் கிளை அலுவலகத்தில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று முன் தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தில் மூன்றாவது தடவையாக இக்கொள்ளை சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (மா)

## வத்தளையில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

நேற்று முன்தினமிரவு தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் வத்தளையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

மரிஸலின் பிலிப் [வயது 45] என்ற இக் குடும்பஸ்தர் கொழும்பிலுள்ள உல்லாசப் பயண நிறுவனமொன்றில் பணியாற்றுகிறார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12-30 மணியளவில் வத்தளை செ. செபஸ்தியன் வீதியிலுள்ள இவரது வீட்டு முன்கதவில் சிலர் பலமாகத் தட்டினர்.

(12-ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு அவசியம்"

### அமெரிக்க அமைச்சர் கருத்து

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வினைக்காணவேண்டும்" என்று அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு ரூபட்ஹெர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

[12 ம் பக்கம் பார்க்க]

### மொரக்கொட்டாஞ்சேனையில்

## கண்ணிவெடிக்கு பொலிஸ் சாரதிபலி! 6 பேர் படுகாயம்!

கொழும்பு

மட்டக்களப்பிலிருந்து 17 மைல்களுக்கு அப்பால் உள்ள மொறக்கொட்டான் சேனையில் பொலிஸ் ஜீப்வண்டி ஒன்று கண்ணிவெடிக்கு இலக்கானதில் ஜீப் சாரதி பலியானார் ஜீப்பில் சென்ற மற்றும் அறுபேர் படுகாயமடைந்தனர்.

அதிரடிப்படை பொலிஸ் பிரிவினர் ஜீப்பில் சென்றபோதே இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை தொடர்ந்து சுற்றுவட்ட பகுதியில் நடந்த தேடுதலின் போது ஆறுபேர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானதுடன் பல தீ வைப்புச் சம்பவங்களும் நடந்துள்ளன.

காயமடைந்த 6 பொலிஸாரும் முதலில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் பலியான சாரதியின் சடலமும் காயமடைந்த [illegible] கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்

நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு 6 பொதுமக்களின் சடலங்கள் கொண்டுவரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இராணுவ, பொலிஸ் ஜீப் மீது கைக்குண்டு வீச்சு சம்பவம் நடந்ததாகவும் இச்சம்பவத்தில் பொலிஸாருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. பெ.

### சட்டவிரோத மின்பாவனை:

## 60வயது மாது பலி!

(யாழ்ப்பாணம்)

பனங்காணியில் பனம்பழம் எடுப்பதற்குச் சென்ற சின்னப்பிள்ளை என்ற 60 வயது மாது. மின்சாரம் தாக்கி மரணமானார்.

கைதடி வடக்கில் இச்சம்பவம் நிகழ்ந்தது அங்காலையில் பனம்பழம் எடுப்பதற்குச்சென்ற இம்மாது பனங்காணியில் நிலத்தில் கிடந்த மின்கம்பி ஒன்றில் தற்செயலாக மிதித்ததினால் மின்சாரம் தாக்கி ஸ்தலத்திலேயே பரிதாபமரணமானார்.

பனங்காணியில் கிடந்த மின்கம்பி சட்டவிரோதமாக மின்சாரம் எடுப்பவர்களால் பாவிக்கப்பட்டுவந்ததாகத் தெரிகிறது. [ஐ]

## அகதிகள் முகாமில் திடீர்ப் பிரவேசம்

### முக்கிய நபர் தேடப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள கதிரவெளி அகதிகள் முகாமை முற்றுகையிட்ட நபருடன் சென்ற இராணுவத்தினர் முகாமிலுள்ள 12 வயதுக்கு மேற்பட்டவர்களை வரிசையாக நிறுத்தி முக்கிய நபர் ஒருவரைத்தேடினராம்.

அதே சமயம் இராணுவத்தினர் சென்ற பாதையில் வந்து கொண்டிருந்த இவலிங்கம் சின்னத்தம்பி (30 வயது) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். (பு மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

சங்கானை யூனியன் M.P.C.S.க்கு முன்பக்கமாக ஒரு பரப்புக் காணியில் கடைக் கட்டிடமும், வீடும், கிணறும், மேல் மாடி அமைக்கும் வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. பொன்னுத்துரை, பட்டின சபை வீதி, சங்கானை. 991

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம், அரசடி வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரான்லி கனிடீன், 148/2, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம். 1067

மாநகரசபை எல்லைக்குள் 2 பரப்பு காணியில் சகல வசதிகளுமுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தனபாலசிங்கம், 10, சின்னக் கண்டு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது எஸ். குணராசா, கைலாசபிள்ளையார் கோவில், 298, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1071

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகாமையில் பிரதான வீதி ஓரமாக 2 பரப்புச் சதுரவடிவமான வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு தொடர்பு: T. விஸ்வநாதன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 1030

அண்மையில் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட Hitachi Portable Component System, Model TRK - 9011 E விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. சின்னத்துரை, கூழாவடி லேன் ஆனைக்கோட்டை. 1038

வேலணை மேற்கு வெள்ளைப்பிட்டியில் வீடு கட்ட உகந்த பதின்மூன்றரை நெற் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 1068, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1068

### 3வது பிறந்த தின வாழ்த்து



செல்வி ஸ்ரீபன் செல்வநாயகம் லஜித்தா

வசாவிளானைச் சேர்ந்த திரு. ஸ்ரீபன் செல்வநாயகம் தம்பதிகளின் மகள் லஜித்தா தனது 3வது பிறந்த நாளை இன்று கொண்டாடுகின்றார். அவரை அம்மா, சலூதி அப்பா, அம்மம்மா, சலூதி பெரியப்பா, பெரியம்மா, ஜேர்மனி மாமா அத்தை குடும்பத்தவர் கிறிஸ்ரன் அத்தான் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர். 1099

## தேவை

நீர்வேலியில் அமைந்துள்ள பேக்கரிக்கு நன்கு அனுபவமுள்ள பாண் தயாரிப்பாளர், உதவியாளர், சைக்கிள் விற்பனையாளர் உடனடியாகத்தேவை. தங்குமிடம், உணவு மற்றும் சகல வசதிகளும் உண்டு. நேரில் வரவும்: கே. ஏ நாதன், (நீர்வேலி ப. நோ. கூ. சங்கம் முன்பாக) முருகன் பேக்கரி, நீர்வேலி. 1056

தனியார் ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றி அனுபவமுள்ள 25 வயது இளைஞர் ஒருவருக்கு மனேஜர் அல்லது காசாளர் அல்லது எழுதுவினைஞர் வேலை தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.1094 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 1094

எங்கள் ஹோட்டலுக்கு பில் கிளாக் இருவர் தேவை 30 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் ஹோட்டல் றுெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1093

வீட்டில் தங்கி சமையல் வேலை செய்யக்கூடிய பெண் சமையல்காரர் உடன் தேவை. தகுந்த கூடிய சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். 125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்; [பழைய பொலிஸ் நிலையம் அருகாமையில்] 1095

''லேப்பம், இலுப்பம் விதைகள் தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம்.'' 1080

தற்கால சூழலை மையமாகக் கொண்டு விரைவில் யாழ்ப்பாணத்தில் தயாராகவிருக்கும் திரைப்படத்துக்கு நடிகர், நடிகைகள் தேவை புகைப்படத்துடன் முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1073, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1073

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நான்கு அல்லது ஐந்து அறைகளுக்குமேல் இருக்கக்கூடிய நல்லசூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய [தொலைபேசி இருந்தால் நல்லது] வீடொன்று உடன் வாடகைக்கு தேவை. மேல் மாடி மட்டுமென்றால் விரும்பப்பட மாட்டாது. யாழ். நகருக்கு மிக அண்மையில் இருப்பது நன்று; தொடர்புகளுக்கு:- ARES TEXTILES, 146, Modern Market, Central Road, Jaffna T. Phone: 24001. (1101)

## கல்வி

யாழ். மாவட்டத்திற்தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 (ஆண்டு 7) இல் அனுமதி பெற விண்ணப்ப முடிவு 10-10-85. பரீட்சை 23-11-85 10 கடந்தகால வினாத் தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும்கொண்ட பரீட்சைத்துணை நூல். ரூபா 12-50. கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை. 1076

## மணப்பந்தல்

யாழ்: இந்து வேளாளகுல எலக்ரோனிக்ஸ் எஞ்சினியர் H.N.D பாஸ் பண்ணி மேல் படிப்பு படித்துக் கொண்டு இங்கிலாந்தில் வேலை பார்ப்பவரும், செவ்வாய் தோஷமற்ற 32 வயதுடைய தமது மகனுக்கு பெற்றோர் அதே குலத்தைச் சேர்ந்த (A/L or Graduate) படித்த அழகுள்ள 26 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகின்றார்கள். கூடிய விரைவில் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 1029, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1029

யாழ்ப்பாண இந்து வேளாள குல, கூட்டுத் தாபனத்தில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றமற்ற அழகிய மணப் பெண்ணுக்கு 33 — 40 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும்: விளம்பர இல: 1036, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1036

### 2—வது பிறந்த தின வாழ்த்து



செல்வன் ஜனார்த்திக் காசிலிங்கம்

நல்லூர் 334, கோவில் வீதியைச்சேர்ந்த காசிலிங்கம் - மலர்மகள் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜனார்த்திக் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (6-10-85) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, கார்த்திக், அப்பம்மா, பப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், விஜய் அண்ணா, துர்க்காக்கா, மது அக்கா, ராஜி மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் முருகன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 1100

## வாடகைக்கு

அரியாலை மாம்பழச்சந்திக்கு அருகாமையில் (கண்டி வீதியில்) சகலவசதிகளுடன் கூடிய 6 அறை வீடு உடன் வாடகைக்கு உண்டு. நல்ல குடிநீர் வசதியுண்டு. விபரங்கட்கு: நாவற்குழி மெடிக்கல் சென்ரர், கண்டி வீதி, நாவற்குழி. 1015

### வைத்தியம்

மனநோய், காக்கைவலி, அல்சர், சருமரோகங்கள், வாதம் நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம். வி. தில்லைச்சந்திரன், Regd - Homoeopth. 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1107

### விற்பனைக்கு

கடைகள் (இரண்டு கொழும்பிலுள்ள வீடொன்றுடன் ஒத்துமாறும் வசதியுமுண்டு. தளபாடங்கள் அலுமாரி, ருக்கைகள், ஷோகேஸ்கள், குளிர்சாதனப் பெட்டி மண்ணெண்ணெய்) - 379, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி யாழ்ப்பாணம். 1105

### 'தாரசு படிகளுக்கு முத்திரை'

[யாழ்ப்பாணம்]

தராசு படிகளுக்கான முத்திரையிடும் வேலை இம்மாதம் 7ம் திகதி முதல் 11ம் திகதி வரை வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளதால், இப்பகுதிகளிலுள்ள சகல வியாபாரிகளையும் இக் குறிப்பிட்ட தினத்திற்குள், தங்கள் தராசு படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் கேட்டுள்ளார்.

### அமைதி வேண்டி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் ஸ்ரீ ஆதிமூர்த்தி குமாரி அம்மன் கோவில் பிரதிவெள்ளிதோறும் மாலையில் தமிழ் மக்களின் அமைதிவேண்டி பஜனைக் கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்றுவருகின்றன. தொல்புரம் மத்தி இந்து இளைஞர் மன்றத்தலைவர் திரு. நா. முருகையா தலைமையில் நடைபெறும் இப் பிரார்த்தனையில் அதிகமானோர் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## நன்றி நவிலல்

இளைப்பாறிய கம்பெரல ஓவசியர்

திரு. நமசிவாயம் தர்மலிங்கம்

அவர்கள்



மலர்வு: 23–12–1926

மறைவு: 23–09–1985

எங்கள் அன்புக்குரிய தலைவர்களது மரணச் சடங்குகளில் கலந்து கொண்டு எமக்குப் பல்லாற்றானும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், துக்கச் செய்திகள் அனுப்பி எம்மைத் தேற்றியோருக்கும் எமது இதயங்கலந்த நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தனித்தனி அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்;

மனைவி, மக்கள், மருமக்கள்.

'லட்சுமிவாசம்'
அளவெட்டி.
03-10-1985 1081


## 4-ம் வருட நினைவு தினம்

சமத்தூர் செல்லத்துரை

(முறிவு நோய் வைத்தியர், ஒட்டகப்புலம்)

தோற்றம்: 5-10-1905

மறைவு: 6-10-1981



எங்கள் அன்பின் திருவுருவமாய் பணியின் உரமாய் வாழ்வின் வழி காட்டியாய் வாழ்ந்து, எம்மை உயர வைத்த அன்புத்தெய்வமே உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது.

பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஒட்டகப்புலம், வசாவிளான் 1026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

## டுனீஸியத் தாக்குதல்

டுனீஸியாவில் நடந்த முதனாம் திகதி இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல். அதனை ஒரு சர்வதேசப் பயங்கரவாத நாடாக்கியுள்ளது. இதைவிட அமெரிக்க அதிபர் திரு றொனல்ட் றீகன் இத்தாக்குதலை வரவேற்றதன் மூலம், மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்காவின் 'குண்டர்களே' இஸ்ரேலியர்கள் என்பதும் வெளிப்படையாகிவிட்டது.

பித் தகர்த்தச் சேதமாக்கியது. இவ்விரு சம்பவங்களில் 'என்டபே' அதிரடியை உலகம் முழுவதும் வரவேற்றன. ஏனெனில் எதுவுமறியா சுமார் 200 அப்பாவி இஸ்ரேலியர்களை உகண்டா சர்வாதிகாரி இடிஅமினின் நிழலில் கொல்லப்படுவதிலிருந்து இஸ்ரேலிய அதிரடிப் படையினர் தமது உயிரையும் துச்சமென மதித்து காப்பாற்றினர்

ஆனால் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகம்

# எல்லை மீறிவிட்ட இஸ்ரேலிய அடாவடித்தனங்களுக்கு அமெரிக்கா 'தாளம்'!

பல நாடுகளையும், சர்வதேச ஆகாய, கடல் பகுதிகளையும் கடந்துசென்று இஸ்ரேல் நடத்திய முதலாவது தாக்குதல் இதுவல்ல 1976ம் ஆண்டு உகண்டாவின் தலைநகரான என்டபே வரை பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தனது நாட்டின் விமானப்

மீது டுனீஸியாவில் நடத்தப்பட்ட இஸ்ரேலியத் தாக்குதல் மனிதாபிமானமற்ற அரக்கத்தனமானதாவே காணப்படுகிறது.

1982ம் ஆண்டு தென் லெபனானினுள் புகுந்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களை இஸ்ரேல் வேட்டையாடியது.

**பா. அனந்தகிருஷ்ணன்**

பயணிகளை மீட்பதற்கு இஸ்ரேல் கமாண்டோக்களை அனுப்பியது

தொடர்ந்து 1979 ம் ஆண்டில் ஈராக்கில் உள்ள அணுசக்தி நிலையமொன்றைத் தனது விமானங்களை அனுப்

லெபனானில் 'ஷபிலா-ஷப்ரா' அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்த இரத்தக்களரியின் உச்சக் கட்டமாக விளங்கியது.

இக்கொடூரத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாமலேயே நாடற்ற பாலஸ்தீனர்கள் லெபனானிலிருந்தும் டுனீஷியாவுக்குக் குடிபெயர்ந்தனர். அங்கு தமது தலைமையகத்தையும் அமைத்து விடுதலை இயக்கப் பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் இஸ்ரேலின் இரத்த வெறி டுனீஸியாவிலும்கூட பாலஸ்தீனர்கள் காலூன்றுவதைத் தடுத்துள்ளது கடந்த வாரம் சைப்பிரஸில் மூன்று சாதாரண இஸ்ரேலிய உல்லாசப் பயணிகள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாகவே டுனீஸ் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும். அக்கொலைகளை பி எல் ஓ தலைவர் யாஸிர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர்களே செய்திருந்தனர் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தனது தாக்குதலுக்கு வெறும ஒரு காரணங் காட்டவே இஸ்ரேல் இப்படிக் கூறியுள்ளது லெபனானிலிருந்து பாலஸ்தீனர்கள் விரட்டப்பட்டது முதல் அவர்கள் இருக்குமிடங்களை கண்டுபிடித்துத் தாக்குவதையே இஸ்ரேல் பிரதான நோக்கமாகக்கொண்டிருந்தது. இதன் மூலம் பாலஸ்தீன இனத்தை வேரறுப்பதே அதன் திட்டமாகும்.

இத் திட்டத்தைச் செயற்படுத்தவே மத்திய தரைக்கடற் பகுதியில் பாலஸ்தீன நடமாட்டங்களை அது மிக அவதானமாக நோட்டமிட்டு வந்தது. இப் பணியில் 'மொசாட்' உளவாளிகளே பெரிதும் ஈடுபடுத்தப்பட்டனர் கடந்த வாரம் சைப்பிரஸில் கொலையுண்ட 3 இஸ்ரேலியர்கள் கூட 'மொசாட்' புலனாய்வுத்துறையின் மிகமுக்கியபுள்ளிகளென்றும், ஆகையினாலேயே இஸ்ரேல் கடல் கடந்து வந்து டுனீஸில் தனது ஆத்திரத்தை வெளிப்படுத்தியதெனவும் பி. எல். ஓ கூறியுள்ளது.

எனவே பாலஸ்தீனர்களை ஒழிக்கும் திட்டத்தில் இருள் போட்டு சுருண்டு பிடிப்பது போல தனது ஆட்களையே பலிக்கடாக்களாக்கி இஸ்ரேல் தனது நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றது.

டுனீஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேல் எதிர் பார்த்தது போல பாலஸ்தீனர்கள் கூண்டோடு ஒழிக்கப் படவில்லை. பி எல். ஓ தலைவர் அரபாத் மீது குறிவைத்து அவரது இயக்கத்தின் முக்கியஸ்தர்களை அவர்களது தலைமையகத்துடன் நாசமாக்குவதே இஸ்ரேலின் திட்டம். ஆனால் இத்திட்டத்திற்கு பெருமளவு பலியானது. எதுவுமறியாத அப்பாவி டுனீஸிய வாசிகளே.

—ஆண் பெண் குழந்தைகளுட்பட டுனீஸியர்கள் இதில் கொல்லப்பட்டுள்ளனர்

(10 ம் பக்கம் பார்க்க]

### ஹேலியின் வால் நட்சத்திரம்

ஹேலியின் வால் நட்சத்திரம் (Hely's Cemet) அடுத்த வருடம் பூமிக்கருகில் தோன்றவிருக்கின்றது கி. மு 3067 ல் இந்த நட்சத்திரத்தைக் கண்டவர்கள் தேசத்தின் சக்கரவர்த்தி இறந்து போவார் என்றும் பெரும் போர் நிகழ்ந்து அநேகர் மடிந்துபோவார்கள் என்றும் கூறினர்கள். இவைபோன்ற கேடுகளை உணர்த்தவே இந்த நட்சத்திரம் தோன்றுகின்றது என்பது ஐதீகம். வானவீதியில் ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கொருமுறை இது தோன்றுவதாகக் கூறப்படுகின்றது. வான நூலின்படி 1066, 1145, 1301, 1456, 1531, 1607 1682, 1759, 1835 ஆகிய ஆண்டுகளில் இந்த ஹேலியின் வால் நட்சத்திரம் தோன்றியது. கடைசியாக 1910 ல் தோன்றியுள்ளது. இதன் கணக்குப்படி பார்த்தால் கி. மு. 3067-ம் ஆண்டு ஏறத்தாழ பாரதப்போர் நடந்த காலத்தில் இந் நட்சத்திரம் தோன்றியுள்ளது இப்பொழுது 1986 இல் தோன்றவிருக்கின்றது

— 'பெ'

## கும்பகோணத்தில் கோதானம்

நாழி அரிசி, நாளெல்லாம் உண்ணப்போதும். நாலுமுழத்துணி போதும் உடலைமறைப்பதற்கு ஆனால் சித்தனைமட்டும் எண்பதுமுழம் இருக்கும் (இருக்கவேண்டும்) என்கிறாள் ஔவைப்பெருமாட்டி.

மன்னர்மாளிகையும், ஆரவாரங்கிருந்துகளும், கேளிக்கைகளும் காணிவல்களும் பாட்டிக்கு ஒரு பொருட்டல்ல.

எளிமையாக வாழ்ந்து ஏற்றம்பெற்ற எமது சமூகம் இன்று பாட்டியின் சிந்தனைக்கு எவ்வித மதிப்பும் அளிப்பதில்லை. காரணம் அறியாமையே! நவீனமயத்தில் பெண்களின் உடை உடலை மறைப்பதற்கே பற்றுமற்போவதற்குக் காரணம் வேறு

செருக்குமிகுந்து ஆரவாரத்தில் ஆழ்ந்து கடமையை மறந்து நிற்கும் மக்கள் இன்று எவ்வித நெருக்கடியை உருவாக்கியுள்ளனர்?

எந்த உயிரையும் கொல்வது மாபாதகம் என்ற அடிப்படையே எமது நிரந்தரப்பண்பாடாகும். ஆனால்; வில்லி என்னும் மலர் சூழுகிட்டால் தாங்கமுடியாத துர்நாற்றம் வீசுவதுபோல் இன்று எங்கள் இளைஞர் ஆயுதத்துடன் போராடி உயிர்த்தியாகம் செய்கின்றனர்; பல்லாயிரம் அப்பாவிமக்கள் கொல்லவும் படுகின்றனர்.

எவ்வகையிலும் இதனை நிறுத்தமுடியாத இன்டாடும் அரசு, மனித உயிரைப்பணயம் வைத்து இங்கு நடைபெறும் விளையாட்டுக்குப் போட்டியாக பிரிட்டனில் வரும் வாரஇறுதியில் 'இலங்கை விழா' நடத்துகிறது. எவரையும் ஏமாற்றமுடியாத 'கும்பகோணக் கோதானம்' இது

காட்டுமிராண்டித்தனத்தின் மறுவேடமாக இது அமைந்தபோதும், வடக்கின் மூளைவளமும் கிழக்கின் உணவுவளமும், அந்தவிழாவில் காட்சியளிக்கா. வான்கோழியின் பொல்லாச்சிறகு ஒரு வேளை காட்சியளிக்கும்.

**கல்லாதவன் கற்றகவி எவ்வாறிருக்கும்?**

## வெகுஜனப்போராட்டமின்றி ஆயுதப் போராட்டம் வெற்றிபெற முடியாது!

மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பல்வேறுபட்ட போராட்டமுறைகளில் ஒன்றே ஆயுதப்போராட்டமாகும்.

இப் போராட்டமானது முற்றிலும் தனியானதொன்றாக, ஏனைய போராட்டமுறைகளுடன் சேராது இடம்பெறுமானால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும். எனவே இந்த ஆயுதப் போராட்டத்துக்கு வெகுஜன ரீதியிலான போராட்டத்தின் துணை மிகவும் அத்தியாவசியமாகின்றது.

வெகுஜனப் போராட்டங்களை நடத்தாது, அப்போராட்டங்களுக்கூடாக மக்களை அழைத்துச் செல்லாமல் அரசியலில் அவர்களை இறங்கச் செய்யமுடியாது எனவே இந்த வெகுஜனப் போராட்டங்களில் மக்களை ஒன்றுசேர்க்க வேண்டும். இதன்மூலம் மக்களுக்கு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை அரசியல் ரீதியாக உணர்த்தமுடியும்.

வெகுஜனப் போராட்டங்கள் மூலமாக மக்கள் அரசியல் அறிவைப் பெறுவார்கள். அந்த வேளையில் பல்வேறு அரசியல் சிந்தனைகளையும் அவர்களிடம் முன்வைக்கலாம். மக்களின் அபிலாஷைகளும், உணர்வுகளும் வெளிப்படும். சமூகக் கூட்டுத்தன்மை உதயமாகும்.

### தனித்துநிற்க முடியாது

விடுதலை இயக்கங்கள் மக்கள் மத்தியில் தொழிற்படுவதன் மூலமே மக்களையும் மாற்றித், தம்மையும் மாற்றிக் கொள்ள முடியும் மக்கள் மத்தியில் தனித்துநின்று செயற்படமுடியாது

இத்தவகையில் மக்கள் மத்தியில் விடுதலை ஸ்தாபனங்கள் செயற்படுவதற்கான தக்க வாய்ப்பைத் தரவல்ல சாதனங்களுள் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கலாம். இதனால் இத்தாபனங்கள் தாமும் பண்படுவதோடு மக்களையும் பண்படுத்துகின்றன.

முன்கூட்டியே பண்பட்டவர்களாக வானத்திலிருந்து பூமியில் திடீரெனக் குதித்த புனிதர்களாகப் பூமியில் ஒருவருமில்லை எனவே வெகுஜன போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலமாக ஒரு சுயபண்பட்ட ஸ்தாபனம் அமையலாம்.

ஒடுக்குமுறை வடிவங்களை-கொடுமைகளை வெளியுலகிற்கு வெளிபபடுத்தவும், எமது துயரங்கள், தேவைகள், அபி

**ஹர்த்தால்**


**பகிஷ்கரிப்புகள்**

**வரையறைக்கு**

**உட்படவேண்டும்**

லாஷைகளை பிரபல்யப் படுத்தவும் வெகுஜனப் போராட்டங்கள் ஒரு சிறந்த வழியாகும்.

(10-ம் பக்கம் பார்க்க)




நாட்டின் நலன்கருதும் நல்ல முகத் தாமரைகள்
வாட்டமுறல் காண்கின்றோம் வந்தசெய்தி தானியாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசராசசோழப் பேரரசன் — 12

# இராசராசனின் அரச அலுவலர்கள்

**க.சி.குலரத்தினம்**

இராசராசன் ஆட்சிக் காலத்திலே சோழப்பெருநாடு ஊர்கள், கூற்றங்கள், நாடுகள், வளநாடுகள், மண்டலங்கள் முதலான உட்பிரிவுகளுடையதாயமைந்திருந்தது இவையேயன்றிப் பெருநகரங்கள் சில தம்மாட்சிப்பலமுள்ளனவாயும் இருந்தன. அவை கூசால், உக்கல் முதலியபெயர்களால் வழங்கின என்ப.

நாட்டின் ஒன்பது வளநாடுகளுள் இராசேந்திரசிங்கவளநாடு பெரும்புகழ்பெற்றிருந்தது அவ்வாறே ஊர்கள் என வழங்கிய பிரிவுகளில் பராக்கிரம பாண்டிய நல்லூர்ப்பற்று எனப்பெயர்பெற்ற ஊர் புகழ்பெற்று நிலவியது

### குடவோலை முறை

ஊர்கள்தோறும் நிறுவப்பெற்று நிலவிய ஊர்ச்சபைகள் உள்ளூர்ப்பொதுமக்களின் உணர்ச்சிக்காகப் பாடுபட்டன. ஊர்ச்சபைகள் தோறும் உட்பிரிவுகள் (Sub Committees) ஒவ்வொருதுறையின் நலன் கருதிப்பணிபுரிந்தன. ஊர்ச்சபைகளின் ஆயுட்காலம் ஒரு வருடகாலமாகும். அவர்கள் பொதுத்தேர்தல் மூலம் தெரியப்பெற்றனர். தேர்வுகள் இரகசியமாகச் சீட்டு முறையில் நடைபெற்றன. தேர்தலில் முன்னின்ற வேட்பாளர்களுள் வாக்காளர் தாம்விரும்பியவர்களின் பெயரைச்சீட்டில் எழுதிக்குடத்துள் இடும் முறை குடவோலை (Secret ballot) என வழங்கியது.

ஊராட்சிச்சபையினர் உள்ளூர் மக்களிடையே எழுந்த பிணக்குகள் வழக்குகள் விசாரித்து நீதிவழங்கினர். அவர்களுள் தோட்டவாரியத்தார் தோட்டக்காரர்களைப் பாதுகாத்தனர். ஏரிவாரியத்தார் ஏரிகுளங்கள் மேற்பார்வை செய்தனர். கழனிவாரியத்தார் வயல் நிலங்களைப் பாதுகாத்தனர். வடவிரதாரணப் பெருமக்கள் புறஞ்சேரிகளைப் பரதுகாத்தனர். பஞ்சவாரியத்தார் குடிமக்களிடம் வரிப்பணத்தைத் திரட்டி அரச கருவூலத்தில் சேர்த்தனர். கணக்குவாரியத்தார் அரசின் வரவுசெலவுக்கணக்குகளைக் கணித்தனர். கலிங்குவாரியத்தார் ஏரிகளின் மதகுகள் சிறிய வாய்க்கால்களை மேற்பார்வை செய்தனர். தடிவழிவாரியத்தார் வயல்களுக்குச் செல்லும் சிறுவழிகளை மேற்பார்வை செய்தனர்.

### சபையும் கோயிலும்

ஊர்ச்சபையினருக்கும் ஊர்கள் தோறும் அமைந்திருந்த பெருங்கோயில்களுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. ஊர்ச்சபையார் தங்கள் கூட்டத்தைக்கோயில் மண்டபங்களிலாயினும், பிராமணர் சிறுவர் மறைபயின்ற மண்டபத்திலாயினும் நடத்தினர் என்பது. ''இவ் ஆர்ப்பெரிய தனி அபிடேக மண்டபத்தே கூடியிருப்ப'' என்னும் தொடராலும், ''எம்மூர்ப்பிரமதானத்தே'' என்னும் தொடராலும் அறியக்கிடக்கிறது.

அரசனுக்கு உதவியாயிருந்த உள்ளூர்ச்சபையார் திருக்கோயில்களுக்குப் பெருமளவில் உபயோகங்கள் உபகரிப்புக்கள் செய்துள்ளார்கள் அவர்கள் திருக்கோயில்களுக்கு அளித்த நிலங்கள் தேவதானம் என வழங்கின; கோயிற் பிராமணர்களின் வாழ்வுக்காக வழிசெய்து வழங்கியவை பிரமதேயம் என வழங்கின. ஊர்ச்சபையார் திருக்கோயில்களில் வட்டிக்குச் கடன் எடுத்ததும் உண்டு.

ஊரவர்கள் திருக்கோயில்களுக்கு அறக்கட்டளை ஏற்படுத்தினால், அவற்றைப் பரிபாலித்து நிறைவேற்றவேண்டிய கடமை உள்ளூர்ச்சபையினரதாகும். இக்கடமையினின்றும் சபையார் வழுவினால் தண்டிக்கப்படவேண்டியவராயிருந்தனர். அரசர்களே திருக்கோயிற்பணி தர்மப்பணி ஆகியவற்றைத் திறம்பட அறநெறியில் செய்தார்களாக, அவர்தம் அரச அலுவலர்களும் அவ்வாறே அறநெறியில் ஒழுகினார்கள் என்பது கல்வெட்டுக்களில் அறியக்கிடக்கின்றது.

இராசராசன் காலத்து அரச அலுவலாளர்கள் சிலர் செய்த அரன்பணி அகில உலக வரலாற்றிலே வேறிடங்களில் காண முடியாதவாறமைந்தனவாகும். பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இங்கிலாந்தில் அரசு வீற்றிருந்த எட்டாம் ஹென்றி என்னும் மன்னனின் ஆலோசனையாளராக அரசபணி செய்துவந்த காடினல் வூல்சி என்னும் பெரியார் தாம் ஆண்டவன்பணி செய்யத்தவறியதையிட்டு வருந்தினார் என்பது வரலாறு.

### இறைபணியும் அரசபணியும்

அவ்வாறன்றிச் சைவத் தமிழரச அலுவலாளர்கள் இறைபணி செய்வதில் என்றும் தவறியதில்லை. இறைபணிசெய்தவாறே அரசபணி செய்த அலுவலாளர் வரிசை பெரிது. அவர்கள் தாம் தாம் செய்த புனிதப் பணிகளின் மகத்துவத்தால் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளனர். இன்றைய பிரித்தானிய பாராளுமன்றத்தின் பாரம்பரிய அடிப்படையில் அமைந்த ஆட்சி இயலில் மந்திரிமாரின் கீழ்ப் பணிபுரியும் நிரந்தரக் காரியதரிசிகள் வரலாற்றில் இடம் பெறுவதரிது ஆனால் இராசராச மன்னர் மன்னனின் குடியரசில் பணிபுரிந்த காரிய உத்தியோகத்தர்கள் தங்கள் தங்கள் பங்களிப்புக்களின் விசேடங்காரணமாக வரலாற்றில் கல்லின் மேலெழுத்தில் காணப்பெறுகிறார்கள்; அவர்கள் அநாமதேயப் பெரியாரக்ளர். இராசராசன் தன் அரச அலுவலர்களைத் தகுதிகண்டு கோமக்கள், பெரும்பிரபுக்கள் பிரபுக்கள் வரிசை நல்கிப் பாராட்டிப் பரிசுகளும் பதவிகளும் வழங்கியுள்ளான். வரிசைபெற்றுயர்ந்து வாழ்ந்தவர்கள் தங்கள் உய்திகருதி சமயப்பணி, தமிழ்ப்பணி சமூகப்பணி புரிந்தார்கள்.

சேனாபதி கிருஷ்ணன் இராமன் என்பான் மும்முடிப் பிரமராயன் எனப்பெயர் பெற்றமை முன்னர் திருவாதவூரர் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம்பெற்றுப் பாண்டியனின் பெருமந்திரியாராய்ப் பணிபுரிந்தமையை நினைவுபடுத்துகிறது இவன்மேலும் பதவிஉயர்வு பெற்று திருமந்திர ஓலைக்காரனும் அரண்மனையில் பெரிய இடம் பெற்றவன். இவனே தஞ்சாவூரில் திருச்சுற்று மாளிகையைத் தன்செலவில் அமைப்பித்தவன்.

பரமன் மழபாடியன் படைத்தலைவனாயிருந்தவன். சீட்புலி நாடு, பாகிநாடு முதலிய பிரதேசங்களை வென்று மும்முடிச்சோழன் என்னும் பட்டம்பெற்றவன்.

### பட்டப் பெயர்

சேனாதிபதி குரவன் உலகளந்தான் என்னும் பட்டப் பெயர் பெற்றவன் முதலில் படைத்தலைவனாயிருந்து, நாட்டை நன்கறிந்த முறையில் அதன்பரப்பை நல்ல முறையில் அளந்து குறிப்பிட்டவன்.

மதுராந்தகன் கண்டராதித்தன் உத்தமசோழனின் மைந்தன் உடன்படிக்கையின் வண்ணம் அரசாளுரிமையைவிட்டுக் கொடுத்து அரசின் அறநிலையைப் பாதுகாப்பானாகக் கோயிற் காரியங்களைக் குறைவற மேற்பார்வை செய்துவந்தவன். இவன் பாட்டனார் கண்டராதித்ததேவர் இங்ஙனமே இளமையில் இறைபணி செய்துவந்தவர்.

ஈராயிரவன் பல்லவரையன் மும்முடிச் சோழப் பேரரசன் இவன் பல்லவர் வழிவந்த பெருந்தரத்து அதிகாரிகளுள் ஒருவன். இவன் தஞ்சைப் பெருங்கோயிலுக்குச் சண்டேசவரரை எழுந்தருளச் செய்து நிவந்தங்கள் குவித்தவன். திருமந்திர ஓலைநாயகம் என்னும் பணியையும், கையெழுத்து வேலையையும் பார்த்தவன். நாயகம் என்னும் பதவி இக்காலத்திலும் ஜெனரல் என்னும் பெயரில் தலைமையைக் குறிப்பதாகும்.

### நாயன்மார் திருவுருவம்

பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியன் என்னும் மூவேந்த வேளாளன். இவன் இராசராசனின் நம்பிக்கைக்குரியவனும் அரச விசுவாசம், இறைபணி, முதலிய பண்பாடுகளில் பெரியவனுமாவான். இவனே தஞ்சைப் பெருங்கோயிலுக்கு சம்பந்தர், அப்பர், சுந்தரர், பரவையார், மெய்ப்பொருள்நாயனர், சிறுத்தொண்டர் முதலான நாயன்மார் திருவுருவங்களை உபகரித்து, மேலும் அணிகலன்கள் வரிசைகள் கொடுத்ததோடு; இராசராசன் உலகமாதேவி ஆகியோரின் திருவுருவங்களையும் செய்து கொடுத்துத் தஞ்சைப் பெருங்கோயிலின் காரியாதியாகவும் இருந்ததோடு நிவந்தங்களும்கொடுத்தவன். இன்னும் திருச்சோற்றுத்துறைக் கோயிலில் தேவாரம் பாடுவோருக்கும் பொன் வழங்க ஏற்பாடு செய்தவன்.

பாளுர் கிழவன் அரவணை [illegible] அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாயிருந்ததோடு தஞ்சைப் பெருங்கோயில் காரியக் கண்காணி நாயகமாகவும் இருந்தவன்.

இராசகேசரி நல்லூர்க்கிழவன் காருயிக் எடுத்தபாதம் இவன் திருமந்திர ஓலை எழுத்தாளன். அந்தரங்க அலுவல்கள் செய்தவன். எடுத்தபாதம் என்பது நடராசப் பெருமானின் நடனத்திருக்கோலத்தில் உயர்த்திய திருவடியை நினைவுபடுத்துவது.

வேளாளன் உத்தமசோழன் மதுராந்தக மூவேந்த வேளாளன், இவன் திருமந்திர ஓலை நாயகமாகப் பதவியுயர்ந்தவன்.

விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரன். இவன் திருமந்திர ஓலை எழுத்தாளன் இராசராசன் ஆனைமங்கலம் என்னும் ஊரை நாகபட்டினத்துப் புத்தகோயிலுக்குப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்த உபயத்தை எழுதியவன்.

### இளவரசன் இராசேந்திரன்

இளவரசன் இராசேந்திரன் இவன் இராசராசனின் அருமைமைந்தன் பெருவீரன், இவனின் இளமைப் பெயர் மதுராந்தகன் என்பது. இராசராசன் தன் சிறிய தந்தையார் மீது கொண்ட பேரபிமானம் காரணமாக அவர் பெயரை இவனுக்கு வழங்கியவன். இராசேந்திரன் 1012 ஆம் ஆண்டில் இளவரசனாக முடிசூட்டப்பெற்று அரச காரியங்களில் அதிக பணிபுரிந்துவந்தவன். தந்தைக்குப்பின் பேரரசனாகித் தென்கிழக்காசிய நாடுகளில் அதிகாரம் செய்தவன். வடபாரதம் வரை சென்று கங்கை பிடித்துக் கங்கை கொண்ட சோழன் எனப் பெயர் பெற்றவன்.

(வளரும்)

# இவ்வாரம் எப்படி?

**இன்று**

மாதம்—புரட்டாதி
திகதி— 20 (1985-10-6)
ஞாயிற்றுக்கிழமை
திதி—ஸப்தமி
நக்ஷத்திரம்—திருவாதிரை

### மேடம்

பெரியோர் புகழ்ச்சியும் பூமி பொருள்லாபங்களும் கிட்டும். நீண்டநாள் பிரயாணம் ஒன்றும் இன்று கைகூடலாம். திடீர் வரவுகளுக்கு மிடமுண்டாம்.

### இடபம்

எண்ணிமைகளும் தடைப்படும் மேலதிகாரியின் கண்டிப்பிற்கு ஆளாகுவீர்கள் சிறிய விபத்தும் ஏற்படலாம்.

### மிதுனம்

தொழில் நிலைமந்தமாயிருக்கும் எந்த விடயமானாலும் ஆலோசித்த பின்பே நடக்கும் குடும்பத்தில் பூசல்கள் மேலோங்கிநிற்கும்.

### கடகம்

பெரியோர் ஆசியுடன் சிலருக்கு மணவாழ்வு கிட்டலாம். பிரிந்தவர் மீண்டும் இணைவர். புதியபாதை திறக்கும். தடைப்பட்ட விடயம் இன்று கைகூடலாம். தெய்வத்தின் அருளும் நிச்சயம் உண்டு

### சிங்கம்

தானிய நஷ்டத்திற்கிடமுண்டு. வியாபாரிகள் முதலீடுகளைத்தவிர்க்கவும் தூரத்துப்பயணமும் துக்கத்தைத்தரலாம் பகைகள்தோன்றலாம் ஆணவம், அவசரம் இவற்றைத்தவிர்த்து நடக்கவும்,

### கன்னி

பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படலாம் ஆராய்ச்சியாளர்களுக்கு உகந்தவாரம் புதிய தொழிலுக்கு வழிகோலப்படலாம் முக்கியமான சந்திப்புமுண்டுகுடும்பமகிழ்ச்சியுமுண்டு.

### துலாம்

வெற்றியுடன் புத்திரலாபம் நன்மையுண்டாகலாம் பொறியியலாளர்களுக்குச் சிறப்பான வாரம் பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. நீண்டநாள் தொல்லைகள் நீங்கலாம்.

### விருச்சிகம்

கழுகுப்பார்வை வட்டமிடும் கல்வித்துறையில் மந்தநிலை தோன்றும் வீண் அச்சமுண்டு அக்கினி ஆயுதபீடையுண்டு, குடும்பத்திலும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

### தனுசு

உள்ளத்தில் உவகைக்குரிய வணிகத்துறையில் முன்னேற்றம் சாஸ்திரப் பேச்சும்இடம் பெறும் ஒளிமயமான சூழ்நிலையும் உருவாகும். தொழில் நலனுமுண்டு.

### மகரம்

குடும்பத்தில் பிளவுகள் தோன்றலாம் நினைத்தகாரியம் தடைப்படும்! பிறர்மூலம் வீண் பிரச்சனை. நண்பர் ஒருவர் மூலம் கவலைதோன்றும்.

### கும்பம்

இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதிஏற்படும். பிதாவழிமூலம் நற்செய்திகிடைக்கும் தொழில் விடயத்தில் சமநிலை தோன்றும் புண்ணியவிருப்பும் மேலோங்கும்.

### மீனம்

மணச்சிறப்புண்டு குடும்பத்தில் சுபகரும் இடம்பெறும். தொழில் விருத்தியும் தொல்லைகள் நிவர்த்தியுண்டு எண்ணங்களும் கைகூடிவரும் சுபவாரம்.

**திருமலை க.வே.ரவீந்திரன்**

## இவர்பற்றிச் சிந்திப்போம்

மனித உணர்வினைத் தட்டி
எழுப்பி பிறஉயிர் படுந்துயர்
பேணியவாழ்வு பெரிது
என்று ஏட்டல் இருந்ததனை
விட்டில்-வீதியில் வைத்திய
சாலையில்
அகதிகள் முகாமில் தேங்கிக்
கிடக்கும்
கஷ்ட ஜீவனத்தில் எங்கள்
பங்களிப் பென்னென்று
நெஞ்சைத் தட்டிக் கேட்
டோமா
கொஞ்சம் எண்ணிப்பார்த்
தோமா
உண்டுகளித்திடும் உத்தமராய்
கண்டும் தட்டிக்கழிக்கும்
கண்ணியவான்களாய்
உண்டு உடுத்து வாழ்கிறோமே
ஒருநிமிடம் சிந்திப்போம்

— ஆழ்கடலான்

மனோ! ஏன்டி அவன் உனக்கு ''டபிள் தாங்ஸ்'' சொன்னான்?

வினோ! இருபது ரூபாயை இரண்டாக்கித் தரச் சொன்னான்; நான் நாலு ஐந்து ரூபா நோட்டைக் கொடுத்தேண்டி!

ஜனனி

## 84–ல் ஜனத்தொகை 84 கோடியால் உயர்ந்துள்ளது

அமெரிக்காவில் ஒரு தனியார் நிறுவனம். கடந்தாண்டு நடாத்திய ஆய்வுஒன்றின்படி கடந்தாண்டு உலகின் ஜனத்தொகை 84 கோடியால் அதிகரித்துள்ளது. 1987-ல் உலக மக்கள்தொகை 500 கோடியாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது


உலகில் மக்கள் பெருக்கம் மிக அதிகமாக உள்ள பகுதி ஆபிரிக்க கண்டம்தான். 1000 பேருக்கு 45 பேர்என அமைந்துள்ளது. மேற்கு ஜேர்மன், சீனா, டென்மார்க், ஹங்கேரி, இலங்கை ஆகிய நாடுகளில் மக்கள்தொகை குறைந்துவருகின்றது.

1983-ல் உலகில் 1000 நபர்களுக்கு 29 குழந்தைகள் பிறந்தன 1984-ல் 1000 நபர்களுக்கு 27 குழந்தைகள் பிறந்துள்ளது. பிறப்புவீதம் குறைவதற்கான காரணம் குடும்பக் கட்டுப்பாடுதான் என்கிறார்கள்.

— சச்சின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவேள் கோட்டம்



'செங்கை ஆழியான்'

## அத்தியாயம் - 4

கதம்பநதிக் கரையோரமாக மாந்தையிலிருந்து அநுராதபுரம் வரை பிரதான பெருந்தெரு அமைந்திருந்தது. இப் பெருந்தெருவே வரலாற்றுக் காலத்தில் அதி முக்கியமான பாதையாக விளங்கியது. இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான தொடர்புகள் இப் பெருந்தெரு வழியாகவே நிகழ்ந்து வந்தது.

இந்தியப் படையெடுப்புகளும் குடியேற்றங்களும் மாந்தையூடாக நிகழ்ந்த போது இப் பெருந்தெருவின் ஊடாகவே உட்பிரதேசங்களுக்குப் பிரவேசிக்க முடிந்தது. எனவே இப்பெருந்தெரு பிரதான ராஜபாட்டையாக விளங்கியதால் வழியெங்கும் கிராமங்கள் அமைந்திருந்தன. பௌத்த வழிபாட்டுத் தலங்களோடு கூடிய பௌத்த கிராமங்களும் சைவக் கோயில்களோடு கூடிய தமிழ்க் கிராமங்களும் அப் பெருந்தெருவில் மாறி மாறி அமைந்திருந்தன.

அதிகாலை மாந்தையிலிருந்து புறப்பட்ட சதாசிவப் பெருமாள், அன்று மாலை வரை கதம்ப நதியின் கரையோரமாகத் தொடர்ந்து நடந்தான். பெருந்தெருவின் இருமருங்கும் நிழல் பரப்பி வளர்ந்திருந்த விருட்சங்கள் அவனது உடல் களைப்பினைப் போக்கின. கதம்ப நதியின் குளிர்ந்த நீர் தாகத்திற்கு இதமாகவிருந்தது. மடு என்ற கிராமத்தில் அமைந்திருந்த கண்ணகி அம்மன் கோயிலில் அன்றிரவு அவன் தங்கி இளைப்பாறினான்.

சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் புகுந்து சேரநாட்டில் தெய்வமான கண்ணகியைப் பற்றி அவன் அறிந்திருந்தான். அவனுக்கு இந்தக் காட்டுக் கிராமத்தில் பெரியதொரு கோவில் அமைக்கப் பட்டிருப்பதைக் கண்டதும் ஈழநாட்டின் மீது அவன் கொண்டிருந்த மதிப்பு உயர்ந்திருந்தது. கண்ணகி அம்மன் ஆலய மடத்தில் அன்றிரவு படுத்திருந்த போது ஏனோ நித்திரை அவனைத் தழுவ மறுத்தது. மாதோட்டத்தில அந்தத் துறவி கூறிய வார்த்தைகள் அவனைச் சுற்றிச் சுழன்றன. அவனால் அத் துறவியின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளவும் முடியவில்லை.

சாதாரண பணிக்கன் அவன். யானைகளைப் பழக்கி, அடக்கி வேலை வாங்கும் பணிக்கன் மகன். அவன் மகன் இந்த இராச்சியத்தின் தலைவிதியை மாற்றி அமைப்பானாம்.

அதிகாலை வேளையில் அவனைத் தூக்கம் தழுவியபோது, ஆலய உதயகால மணி ஒலித்தது. அவன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தன் பயணத்தைத் தொடங்கினான்.

அன்று மத்தியானம் அவன் செட்டி குளத்தை அடைந்தான். செட்டிகுளம் ஒரு சிறிய கிராமம், வௌவாலை (வவ்வாலை) என்ற கேணியுடன் அமைந்திருந்த சந்திரசேகர சிவாலயத்தில் இளைப்பாறிக் கொண்டான். மதுரையைச் சேர்ந்த வீரநாராயணன் செட்டி என்ற வணிகனின் மரக்கலம், நடுக்கடலில் உடைந்ததால் மாதோட்டத்தில் கரையேறி, தன்னுடன் வந்தவர்களையும் செட்டிகுளத்திற்கு அழைத்து வந்து இங்கு குடியமர்த்தினான். அவன் கட்டிய கோயில்தான் சந்திரசேகரச் சிவாலயமும் வெளவாலைக் கேணியும் என அங்கு அவனுக்குச் சிலர் தெரிவித்தனர்.

பெருந் தெருவின் போக்கில் சிவாலயங்கள் பல காணப்பட்டன.

செட்டிகுளத்தில் புதியதொரு தகவல் சதாசிவப்பெருமாளுக்குக் கிடைத்தது,

''ஜயவர்த்தன புரத்திற்குச் செல்வதாயின், கதம்ப நதிக் கரையோரமாகச் செல்லாமல் கதம்பநதியை இவ் விடத்தில் கடந்து அக்கரையில் பிரவேசித்து அப்படியே எதிர்ப்படும் காட்டுப்பாதையில் முப்பது கல் தொலைவு சென்றால் ஜயவர்த்தனபுரத்திற்குச் செல்லும் பெருந்தெரு எதிர்ப்படும். ஆனால் அப்பாதை யானைகள் நிறைந்தது. பயங்கரமானது''

சதாசிவப் பெருமாள், கதம்ப நதியைக் கடந்து காட்டுப்பாதையில் செல்வதென முடிவெடுத்துக் கொண்டான். யானைகள் அவனைக்கண்டுதான் பயப்படவேண்டும்.

''உமக்கு அவர்கள் பாஷை தெரியுமா?''

''தெரியும்... சிறு வயதில் நான் ஜயவர்த்தனபுரியில் என் மாமனுடன் இருந்திருக்கிறேன்''

கதம்பநதியைக் கடந்து காட்டுப்பாதையில் தன்னந் தனியனாக அவன் நடந்தான்.

## சப்புமல் குமாரய

பாதையில் எதிர்ப்பட்ட யானைகள் எதற்கும் அஞ்சாது தங்களை நோக்கி நடந்துவரும் அவனைக்கண்டு, மூசிவிட்டு வழியைவிட்டிறங்கி காட்டிற்குள் தம்மை மறைத்துக்கொண்டன.

அன்று மாலை அவன் காட்டுப்பாதையைவிட்டுப் பெருந்தெருவில் பிரவேசிக்கவிழைந்த போது, அந்தச் சம்பவம் நடந்தது. அழகிய பல்லக்கு ஒன்றினை அறுவர் தூக்கிக்கொண்டு காட்டிற்குள் விரைவதை அவன் கண்டான். அதற்குள்ளிருந்து ஒரு பெண் அவலக் குரல் எழுப்பிக் காப்பாற்றும்படி வேண்டுவதையும் அவன் கேட்டான்.

இயல்பாகவே அவனுள் உறங்கிக்கிடந்த வீர உணர்வும் பிறருக்கு ஆபத்தில் உதவும் எண்ணமும் வீறுகொண்டெழுந்தன. தன்கரத்திலிருந்த பொதியிலிருந்து வேகமாக அங்குசத்தையெடுத்துக்கொண்டான்.

''நில்லுங்கடா'' என்று கத்தியவாறு அவர்களை நோக்கிப் பாய்ந்தான். பல்லக்கைத் தூக்கிக்கொண்டு விரைபவர்கள் நிற்கவில்லை. அவன் அவர்களை நெருங்கியதும் அவர்களில் ஒருவன் வாளை உருவிக் கொண்டு அவனை எதிர்கொண்டான். மற்றவர்கள் பல்லக்கைக் காவிக்கொண்டு விரைந்தனர்.

ஓங்கியவாள் இறங்குவதற்கு முன்னரே சதாசிவப்பெருமாளின் கரத்திலிருந்து விடுபட்ட அங்குசம் அவன் மார்பில் பாய்ந்துவிட்டது. அவன் அலறிக்கொண்டு நிலத்தில் சாய்வதைக்கண்ட ஐவரும் எதிரியின் பலத்தைப் புரிந்துகொண்டவர்களாக ஒருங்கே ஓடிவந்தனர். சதாசிவப்பெருமாள் மண்ணில் சரிந்தவனின் வாளை வலக்கரத்திலும் அங்குசத்தை இடக்கரத்தில் பற்றிக்கொண்டான்.

எதிரிகள் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர்; அவர்களைத் தனித்து நின்றெதிர்ப்பதில் சதாசிவப்பெருமாள் களைப்படையவில்லை. எனினும் அவர்கள் ஒருங்கே அவன் மீது வாள்களை வீசியதால், உடலில் காயங்கள் பட்டு இரத்தம் சிந்தத்தொடங்கியது.

எனவே சதாசிவப்பெருமாள் தன் யுத்தமுறையை மாற்றிக் கொண்டான். வாளினால் எதிரிகளின் வாள்களைத் தடுத்துக்கொண்ட அதேவேளை இடக்கரத்தால் அங்குசத்தை வேகமாக எதிரிகளின் மார்புகளுக்குக் குறிவைத்து வீசத்தலைப்பட்டான். மூவர் அத்தாக்குதலுக்கு இலக்காகி விழுந்ததும் மற்ற இருவரும் பின்வாங்கத் தொடங்கினர். அவர்களின் மனதில் பதிந்துவிட்ட பய உணர்வு, சதாசிவப்பெருமாளுக்குச்சாதகமாக அமைந்தது.

வேகமாக வீசிய அவன் வாளுக்கு ஒருவன் பலியாக மற்றவன் காட்டிற்குள் புகுந்து ஓடி மறைந்தான்.

அறுவரைத் தன்னந்தனியாக எதிர்த்து நின்று மண்ணில் சரித்த சதாசிவப் பெருமாளை அடங்காவியப்புடன் பல்லக்கிலிருந்து இறங்கிய அழகிய பெண்ணொருத்தி பார்த்தாள். அவள் முகத்தில் தெரிந்த பயம் மறைந்து வியப்புப் படர்ந்தது.

தன்னுடலில் படர்ந்த இரத்தத்தைத் துடைத்தவாறு அவன் அவளை நெருங்கி, ''பெண்ணே, நீ யார்?'' என்று கேட்டான். அவன் பேசிய மொழி அவளுக்குப் புரியவில்லை. அவன் சிங்கள மொழியில் கேட்டபோது அவள் பதில் தந்தாள்.

''நந்ததேவி'' என்றாள் அவள். 'ஜயவர்த்தனபுரக் கோட்டையிலிருந்து அனுராதபுரத்திற்கு [illegible] வந்த வீரர்களைக் கொன்றுவிட்டு என்னைக் கவர்ந்து வந்தனர். புத்தனின் கருணையால் தாங்கள் வந்து காப்பாற்றினீர்கள்...''

அவர்கள் காட்டுப்பாதையிலிருந்து பெருந்தெருவிற்கு ஏறிய போது ஐந்து வீரர்கள் பாதையில் வாள் வெட்டிற்கு இலக்காகிச் சரிந்து கிடந்தனர். பல்லக்குத் தூக்கிகள் பயந்தால் எங்கோ ஓடிவிட்டுத் திரும்பி வந்திருந்தனர்.

''என்னைக்காப்பாற்ற வந்த வீரர்கள் இவர்கள் தாம்'' என்ற நந்ததேவி, வீரரே, உம் பெயர் என்ன? என வினவினாள்,

சதாசிவப்பெருமாள்..பணிக்கன்...''

''என்னுடன் கோட்டைக்கு வாருங்கள் என் பெரிய தந்தையாரிடம் கூறி தக்க வேலை அரண்மனையில் வாங்கித் தருகிறேன்''

''நன்றி; நந்ததேவி எனக்காகக் கோட்டையில் ஒரு வேலை காத்திருக்கின்றது. அதற்காகத் தான் போய்க் கொண்டிருக்கிறேன்.''

''அரண்மனைக்கா?''

''ஆமாம்''

''என்னுடன் வாருங்கள்''

அவர்கள் பிரயாணம் குதிரைகளில் நிகழ்ந்தது நந்ததேவி அங்கு நின்றிருந்த குதிரைகளில் ஒன்றில் தாவி அலட்சியமாக ஏறிக்கொண்டாள். மண்ணில் இறந்து கிடக்கும் வீரர்கள் வந்த புரவிகள். அவை. சதாசிவப்பெருமாள் கரிய குதிரையொன்றில் ஏறிக் கொண்டான்.

''உங்கள் பெரிய தந்தை யார்''? எனச் சதாசிவப் பெருமாள் கேட்டான்.

## பகுதி ஒன்று: ஆக்கல்

''இந்த நாட்டின் மன்னர் பராக்கிரமபாகு'' என்று விடை கூறியபோது அவன் திகைப்படைந்தபோனான்.

'நீங்கள் இளவரசி...'

அவள் நளினமாகச் சிரித்தாள். அன்று முழுவதும் அவளுடன் அவன் தன் பயணத்தைத் தொடர்ந்தான். நீண்ட பயணம். அழகியதொரு பெண்ணுடன் பயணம்செய்வது இனிமையாக இருந்தது. பாதை மருங்கில் வளர்ந்திருந்த நிழல் மரங்களும், இடையிடையே சலசலத்து ஓடும் நதிகளும் தராத குளிர்ச்சியை அவள் பேச்சு அவனுக்குத் தந்தது.

விதி என்பது வலிதுபோலும்.

கோட்டையை அவர்கள் அடைந்த போது முதற்சாமம் தொடங்கியிருந்தது. செய்தி அறிந்தமன்னன் பதறிப்போய் ஓடிவந்தான். தம்பியின் மகள் மீது மன்னன் வைத்திருந்த பாசத்தைச் சதாசிவப்பெருமாள் உணர்ந்தான்.

''வீரனே, நீ செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்'' என்றான் பராக்கிரமபாகு

அவன் செய்த கைம்மாறினை முதலியார் இராசநாயகம் தனது நூலில் ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பின்வருமாறு எழுதினார்;

''...கோட்டை அரசனாகிய ஆறும் பராக்கிரமபாகுவின் சபைக்கு, மலையாள தேசத்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் முஸ்லிம் பாடசாலை

பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் வரலாற்றில் முதல் தடவையாக முஸ்லிம் பாடசாலையொன்று இம் மாதம் திறக்கப்படவுள்ளது. ஆசிய வம்சாவளிப் பிரஜைகளின் உருக்கமான வேண்டுகோளை அடுத்து, பிரிட்டிஷ் அரசாங்கம் இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு இணங்கியுள்ளது. இப் பாடசாலை மூலம் முஸ்லிம் சமூகத்தினரின் கலை, கலாசாரம் பிரிட்டனில் பேணிப் பாதுகாப்பதற்கு வழியேற்பட்டுள்ளது.

—சச்சின்

## மண்ணுலக மோட்சம்

எண்ணிறந்த பக்தகுழாம் இன்பமுடன் தேடி
என்தாயே என்தாயே என்றொருங்கு கூடி
பண்ணுடனே இசை அமைத்துப் பாடுகின்ற போதும்
பரவசமாய் நின்ற நிலை பார்க்கின்ற போதும்
மண்ணுலக மோட்சமெனும் மகிமை தனைக்கொண்ட
மருத மடுச் சேத்திரத்தின் மாண்பினைநான் கண்டேன்

தன்மதலைத் தழுவிநின்ற தாயவளின் தூய
தரிசனத்தைப் பெற்றவர்கள் தாரணியினிற் கோடி
புண்ணியங்கள் செய்தவர்கள் பெறற்கரிய பேறு
பெற்றதென வேதியம் பூரிக்கும் போது
மண்ணுலக மோட்சமெனும் மகிமைதனைக் கொண்ட
மருத மடுச் சேத்திரத்தின் மாண்பினைநான் கண்டேன்

விண்ணரசி தேர்ப்பவனி வீதிவரும் போது
வீற்றிருந்த நேர்த்தியினைப் பார்த்திருந்த போதும்
எண்ணரிய கவலையற்றி எய்துபவன் தானே
என்றிதயம் பூரிப்பு எய்துகின்ற போதும்
மண்ணுலக மோட்சமெனும் மகிமைதனைக் கொண்ட
மருத மடுச் சேத்திரத்தின் மாண்பினைநான் கண்டேன்

அன்னையவள் தன் சுதனை அரவணைத்த பாங்காய்
ஆலயத்தின் முன்றினிலே நீல மணித் தேரில்
சொர்ணமயமாய்ப் பவனி சுற்றிவரும் போது
சோபிதமா சோபிதமே சொல்லிடவொணாது
மண்ணுலக மோட்சமெனும் மகிமைதனைக் கொண்ட
மருத மடுச் சேத்திரத்தின் மாண்பினைநான் கண்டேன்

— பாஷையூர்ப் புலவர் ஆ. செகராசசிங்கம்

★ மடுமாதா ஐப்பசிப் பெருநாள் இன்று

## மன்னிப்பு

மன்னிக்கவும்!
என்ன,
யாரைக்கேட்கிறீர்கள்!
என்னைய ?
நான் யார் மன்னிக்க!

மன்னிக்கும் மாண்புள்ள
அந்த
இரட்சகர் யேசுவைச்
சிலுவையிலே சேர்த்து
விட்டார்களே

அப்படியானால்
ஆம்.
அடித்துவிட்டு
முத்தம் கொடுக்கும்
குழந்தையின் அன்னை
மன்னிக்கப்பட்டாள்

- முருகவே பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னும் ஒரு திங்கள்

(குறுங்காவியம்)

புலவர் ம. பார்வதிநாதசிவம்

[ 6 ]

தன்னுடைய துயரனைத்தும் வெளியே விட்டுத்
தரளநகைப் பூங்கோதை வகுப்புச் சென்றாள்
கன்னலினைக் கொடுப்பாள்போல் மாணுக் கர்க்கு
கவிதையினைக் கற்பித்தாள் இலக்க ணத்தும்
என்னென்ன மாணவர்க்கு விளங்கா வென்றே
எய்தியதாம் அனுபவத்தால் கண்ட கோதை
அன்னவர்க்கே இலக்கணத்தைத் தெளிவாய்ச் சொன்னாள்
ஆர்வமுடன் மாணவரும் கேட்க லானார்.

தேவதையாய் விளங்குகின்ற அவளின் தோற்றம்
செய்வதெல்லாம் ஒழுங்குறவே செய்யும் பண்பு
பாவையென அவ்வகுப்பில் உலவும் கோலம்
பத்துமுறை ஐயத்தைக் கேட்டிட் டாலும்
ஆவலுடன் பதில்சொல்லும் பொறுமை உள்ளம்
அவர்கல்விக் கே உழைத்தல் அனைத்தும் சேர்ந்து
சேவைக்கே அவள்பிறந்தாள் என்று கற்போர்
சிந்திக்கும் நிலையினிலே வைத்த தன்றே.

கல்லூரி மணிஅடித்து வீடு நோக்கிக்
காலெடுத்துப் பூங்கோதை வைத்த வேளை
"நில்லுங்கள் கோதை" என உரைத்த வாறே
வந்திட்டான் அவள்சிறிய தாயின் மைந்தன்
"நல்லதொரு செய்திஇங்கு சொல்ல வந்தேன்
நாளைக்கே எனதுமணப் பதிவு நாளாம்
சொல்லுதற்கு வீடுவர நினைத்தேன் ஆனால்
தொலைவான அலுவல்கள் நேர மில்லை"

"மைத்துனரும் நீங்களுமே நாளை வந்து
மணப்பதிவைச் சிறப்பித்துக் கொள்ளல் வேண்டும்
எத்தனைபேர் இருந்தாலும் உங்கள் போல
என்மீது பற்றுடையோர் இல்லை" என்றான்
"மெத்தஉவமை ஆனாலும் வசதிங்கள்
விளக்குதற்கோ இவ்வேளை நேர மில்லை
சித்தியிடம் நாம்வருவோம் எனச்சொல்" என்றே
சேயிழையாள் கோதையும்தான் இயம்பிச் சென்றாள்.

ஈசொன்றே கருமமெனக் கொண்ட ராஜன்
கருத்துடனே மறுநாளை வழக்குக் கட்டை
மேசைமிசை வைத்தபடி ஆயும்வேளை
மெல்லியலாள் கோதையுமே அங்கு சென்று
பேசுதற்காம் துணிவுதனை அழைத்துக்கொண்டு
"கேட்டீரோ ஒருசேதி என்பால் மிக்க
நேசமுறு சித்திமகன் கல்லூரிக்கே
நிகழுமொரு சுபசெய்தி சொல்ல வந்தான்?"

"வீட்டிற்கு வரநேரம் இல்லை என்றும்
மேவுமொரு மணப்பதிவு நாளை என்றும்
கூட்டிஉமை வரும்படியும் சொன்னான்" என்றாள்
கோபித்துக் கோதையினை ராஜன் பார்த்தே
"கோட்டினிலே நாளைமிக வேலை உண்டு
கொஞ்சமுமே உனக்கறிவோ இல்லை மற்றும்
வீட்டினிலே இருந்தபடி தந்தி ஒன்றில்
விருப்பம்போல் வீவெடுக்க வாழ்த்தி நானே"

உன்சித்தி மைந்தனுக்கோ வீடு வந்தே
உனமரா அழைப்பதற்கோ நேர மில்லை
என்தனுக்கு மட்டும்தான் நேரம் உண்டோ?
இதுமுறையோ தெரிந்தோரைக் கேட்டுப் பாராய்
அன்னவன்பால் பற்றிருந்தால் நீயே செல்வாய்
அதற்குநான் வரேன்" என்றேகூறி விட்டுப்
பின்னுமவன் வழக்குதனை ஆய லானான்
பெய்வளையாள் பேசாது விலக லானாள்.

மற்றநாள் கல்லூரி சென்றாள் தன்னை
மனமுவக்கும் தோழியாம் நளினி கண்டே
"பெற்றெடுத்தாள் தங்கைமகன் வாழ்வில் இன்றே
பெருநிகழ்ச்சி உளதென்றார் நீஇங் குள்ளாய்
உற்றதென்ன உரைத்திடெனக் கேட்ட வேளை
ஒன்றுமே சொல்லாமல் அழுதாள் கோதை
மற்றவளின் துயரத்தைத் தாங்காள் ஆகி
மங்கையராம் நளினியுமே சொல்ல லானாள்

"திருமணத்தின் முன்உன்போல் மகிழ்ச்சி யாகத்
திகழ்ந்தோர் இக்கல்லூரி தனில்யார் அம்மா
ஒருகுறையும் அறியாத குழந்தை போல
உவப்புடனே இருந்திட்டாய் ஆனால் இன்றே
உரியசுத ந்திரம்அற்றே அடிமை போல
உருக்கின்றாய் இருவிழியால் கண்ணீர் தன்னை
பெருவருத்தம் நினைஎண்ணி எனக்கே என்று
பெருகுகின்ற கண்ணீரின் உடனே சொன்னாள்.

"படர்கொடிக்குக் கொம்புதான் துணைவன்" என்றே
படித்திட்டேன் உன்வாழ்வில் அதனைக் காணேன்
நெடுமனையும் பெரும்பொருளும் கொடுத்த பெற்றோர்
நின்சிரிப்பை அமைதியினை அகற்ற என்றே
இடர்விளைக்கும் கொடுமுள்ளைக் கொணர்ந்து விட்டார்
எதிர்காலம் எப்படிப்போம் எனயார் தோவார்
கொடுவிதியால் ஆய்வின்றி நிகழ்வதான
குறைமலிந்த திருமணங்கள் பலவே" என்றாள்.

[தொடரும்]

# கடலும் அலையும்

["கடலில் எண்ணற்ற அலைகள்; எண்ணக்கடலிலும் எண்ணிலா அலைகள்; இலக்கியக்கடலிலுந்தான் எத்தனை அலைகள். இலக்கியக்கடலில் மூழ்குகையில் எண்ணக் கடலில் எழும் அலைகளாக இங்கு மனக் கோலமிடுகின்றார் கட்டுரையாளர். ஆ-ர்]

பெற்றோர் தமது பிள்ளைகளை இளமைக் காலத்திலேயே பண்பாடுள்ளவர்களாக, ஆளுமை நிறைந்த வர்களாக வளர்ப்பதன் மூலம் அவர்களை மிக உயர்ந்த நிலைக்குட்படுத்தலாம். ஐந்து வயதுக்குட்பட்ட காலத்திலேயே இப்பழக்கத்தை ஏற்படுத்த முடியும். இதற்காகப் பெற்றோர் சிந்தனை, சொல், செயல் மூன்றையும் ஒருங்கிணைந்து அவதானத்துடன் செயற்படுத்துதல் அவசியம். பெற்றோர் அவதானமாக இருந்தாலும் சூழலால் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு குழந்தை; பண்புடனும், அழகுணர்வுடனும் வளர்ந்து பாடசாலை செல்லும் பேறு கிடைத்தால், ஆசிரியர் மனதில் இலகுவாக இடம் பிடித்துவிடும். ஆசிரியரும் இத்தகைய குழந்தையிடம் நன்மதிப்புக் கொண்டு, மிகுந்த அக்கறையோடு கண்காணிக்க, அதன் வளர்ச்சி மிக எளிதாகி விடுகின்றது.

பாடசாலை சென்ற மாணவன் பலதிறப்பட்ட மாணவர்களைச் சந்திப்பான். அவன் கருத்துக்கள் உணர்வுகள் வேறுபடும் உயிரினம் காலவோட்டத்துக்குத் தம்மை இசைவு படுத்துந் தன்மையுடையது. மாணவனும் இசைவு படுவான். பண்பாக வளர்ந்தாலும், சிறிய திருப்பங்கள் பெரிய மாறுதல்களை ஏற்படுத்திவிடும். பெற்ற பண்புகள் நிலைத்திருக்க; அவனறியாமலே நீதியுணர்வுகளை உள்ளத்திற் தங்கச் செய்துவிடுதல் நல்லது. இல்லாவிடில் அவ்வப்போது ஏற்படும் பேரிடிகளினாலும் கடுங்காற்றினாலும், கலக்கமடைந்த கப்பலோட்டும் மாலுமி போன்று, இவன் கலக்கமடையாது உறுதியாக இருக்கவும் நிலை தளர்ந்து கலங்கும் போது தாங்க வல்லவை இந்நீதி நூற்பாடல்களே! இதன் இன்றியமையாமை மரபுக்கல்வி போற்றப்பட்ட ஒரு காலத்தில் உணரப்பட்டது அந்தக் காலகட்டத்தின் மனிதப் பண்பாடுகளையும் காலத்தின் வளர்ச்சியுடன் பொருத்தி சந்ததி இடைவெளி (Generation Gap) யோடு பொருத்தி இன்றைய இளைஞர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, விட்டுக் கொடாத தன்மைமனிதன் தவறே செய்ய முடியாது. நாங்கள் செய்வதனைத்தும் சரி என்ற வாதம் போன்றனவும் ஏனைய பிறவும் பெரும்பாலான இளைஞர்களிடை இருப்பதனையுணர முடியும். எம்மால் நன்றுகஉணர்ந்த முடியாத மரபுக் கொள்கைகள் பல கடைப்பிடிக்கப்படுகின்றன. இதுவரை இந்த மரபுகள் நிலைத்துவருவதால் அது சரியானதாக இருக்கவேண்டும் என்றெல்லாம் வாதிடுகின்றோம் இதுபோல நன்றுகவிளங்கிக்கொண்ட மரபு ரீதியான கல்வியும் ஏனைய கல்விமுறையுடன் இணைக்கப்பெற வேண்டும். ஓரளவாவது காப்பாற்றப்பட வேண்டும் என்பதனை ஏனோ மறந்துவிடுகின்றோம். மரபுக்கல்வி மறக்கப்பட்ட இன்றைய காலகட்டத்தில், நீதி நூல்களைக் கற்பார் இல்லை. ஒருசிலர் இதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கற்றாலும் கற்பித்தாலும் மனனஞ்செய்யும் பழக்கம் அற்றுவிட்டது. மனனஞ் செய்தால் வேண்டிய போது கைகொடுக்கும். மனதில் நின்று நிலைத்து தவறு செய்ய இடந்தராது. மனச்சாட்சி தொழிற்பட இக்கருத்துக்கள் விடையாக வந்து சேரும். நாமும் தூய்மையடைவோம்.

ஒருவர் வாழ்வில் அவர் அறிந்தோ அறியாமலோ குற்றம் குறைகள் வந்து சேரும். தன் நிலை தடுமாறும் சந்தர்ப்பங்கள், எதிர்பாராத உணர்ச்சித் தூண்டுதலினால் குற்றம் [illegible]

குற்றங்களை உடன் மறத்தல் நல்லது. ஏனெனில் அது மனதில் இருந்து வளர்ந்து மிக்க தீங்குதர வல்லது. இதை எண்ணியே குற்றம்ஒன்றும் பாராட்டித் திரியவேண்டாம் என்கின்றார் உலகநாதர். குற்றங்களைச் சாதாரண மனிதர் மறந்து விடுவதில்லை அதை மனதில் இருத்தித் தீங்கு செய்வர். சான்றோர் அதனை உடன் மறந்து விடுவர். கடையாயர், இடையாயர், தலையாயர் குற்றங்களைக் கொள்ளும் முறையை மூதுரை விளக்குகின்றது. பெரிய பாறுங்கற்கள் பிளவு பட்டால் இணையவும் மாட்டாது. இணைக்கவும் முடியாது. பொற்றுண்டு பிளவு பட்டால் நெருப்பைக் கண்ட மாத்திரத்தில் இணைந்துவிடும். இது நெருப்புத் துணை நின்றதால் இணைந்தது. நீரை ஊடறுத்து ஏதேனும் ஒரு பொருளை உள்ளே செலுத்த முடியும். ஆனால் ஊடறுத்த சுவட்டை உணர முன்னே அது மறைந்து விடும். தலையாய மனிதன் நீரின் பிளவு போன்ற, இடையாய மனிதன் பொன்னின் பிளவு போன்றும், கடையாய மனிதன் கற்பிளவு போன்றும் உள்ளான் என்பதே அப்பாடல்.

"கற்பிளவோ டொப்பர்
கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்
பாரும்
போல்வரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல
மாறுமே
சீரொழுகு சான்றோர்
சினம்"

சினம் கடையாரைக் கூட விடாது. இடையாயர் ஒருவர் கட்டக் கூடுவர். தலையாயர் பிரிந்த அப்பொழுதே கூடுவர். இதே போன்று நாலடியார்ச் செய்யுள் ஒன்று.

"நெடுங்காலம் ஓடினும்
நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப்
பரக்கும் - அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போல்
தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர்
சினம்"

வட்டூர்

**என். கடம்பன்**

கோபம் விரைவில் தணிய வேண்டியது. தலையாயரைப் போல சான்றோராய் நீதி நூற்கருத்துக்களைச் சிந்தையிற் பதிப்போம். நல்லதல்லாதது நிலைத்தல் நினைவினுந்துயரம்.

# பசுவும் நாமும்

இந்தக் குழந்தை என்றில்லை.-எந்தக் குழந்தையானாலும், பெற்ற அன்னைக்கு அடுத்தபடியாக அதற்குப் பாலூட்டி வளர்ப்பது பசுதான்.

சில குழந்தைகளுக்கு அன்னையின் பாலை அருந்தி வளரும் பாக்கியம் இல்லாமல் போய்விடுவதுண்டு. அப்போது அந்தக் குழந்தைகளுக்கு அன்னையின் ஸ்தானத்தை வகிப்பது பசுதான்.

பசுவிடம் பாலை மட்டுமா பெறுகிறோம்? கழிவுப் பொருள்களாக அது வெளியேற்றுவதெல்லாம் கூட நமக்குப்பயன் படுகின்றன. அவற்றுக்குமருத்துவ குணங்கள் இருப்பதாக நமது மூதாதையர்கள் என்றோ கண்டுணர்ந்து சொன்னதை இன்றைய விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது

பசுவின் சாணத்திலிருந்து எரிவாயு உற்பத்தி செய்து கிராமப் புறங்களிலெல்லாம் விளக்குகள் எரியவும், சமையல் செய்யவும், வயல் வெளிகளுக்கு நீர்ப்பாசனம் செய்யவும் ஆரம்பக்கட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

பசுவின் மேன்மையை முன்னதாகவே முற்றுமாக உணர்ந்தவர்கள் நாம். பாரதத்தின் பொருளாதாரமே பசுவை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று உலகில் உள்ள பொருளாதார அறிஞர்கள் கூறுமளவுக்குப் பசுவை நமது அன்றாட வாழ்க்கையுடன் பிணைத்துக் கொண்டவர்கள் நாம்......பசுவில் முப்பது கோடி தேவர்களும் வாசம் செய்வதாக உணர்ந்து, அதன் புனிதத்தை வணங்கி வழிபடுவது நமது கலாசாரம்.

ஆனால், இடைக்காலத் தடுமாற்றங்களில் பசுவை எல்லா மிருகங்களையும் போல ஒன்றாக எண்ணும் சுபாவம் நமக்கு எப்படியோ வந்து சேர்ந்திருக்கிறது.

நமது குழந்தைகளுக்கெல்லாம் பாலூட்டிய மாதாவாயிற்றே என்ற பதைப்பு இல்லாமல் பால் மரத்துப் போன பசுக்களை அடிமாடுகளாகக் கழித்துக் கட்டவும் நம்மில் பல பேர் துணிந்துவிடுகிறோம். இந்த நன்றிகெட்ட போக்கிற்கு எப்படி முற்றுப் புள்ளி வைப்பது?

காஞ்சிப் பெரியவர்களான ஜகத்குரு ஸ்ரீஜயேந்திரா சரஸ்வதி சங்கராசாரியார் அண்மையில் ஓர் அருமையான யோசனையை அருளியுள்ளார்கள்.

பசுவைப் பாரதத்தின் தேசிய மிருகமாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. தேசிய மிருகம் என்கிற அந்தஸ்தைப் பசுவுக்கு வழங்கிவிட்டோமானால் அதற்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் எல்லாம் தானே முற்றுப்பெற்றுவிடும் என்று சுவாமிகள் கூறியிருக்கிறார்கள்.

சத்தியமான வார்த்தை!

புராதன பாரதத்தில் பசுவிற்கு அளிக்கப்பட்ட மரியாதைகள் எல்லாம் 'தேசிய மிருகம்' என்ற முறையில் மீண்டும் அதற்குக் கிடைக்கத் தொடங்கிவிடும்......பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் உரிய மிருகமாகப் பசுவைக் காப்பது, தேசியக் கொள்கையாகிவிடும்......பால் வற்றிய பசுக்களை அடிமாடுகளாகக் கொலைக்களத்திற்கு அனுப்பும் கொடுஞ்செயலுக்குத் தானாகவே ஒரு முற்றுப்புள்ளி விழுந்துவிடும்.

ஜகத்குருவின் அறிவுரையைத் தட்டாமல் கேட்போம்.

பசுவைப் பாரதத்தின்தேசிய விலங்கினமாக அறிவித்து, கோமாதாவுக்குரிய கௌரவத்தை அளிப்போம்.

தொகுப்பு

க. கனகராசா ச. நீ.

ஆதாரம்:- 'ஞானபூமி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநாவல்




(7)

கமலா இப்போது யாழ்ப்பாணத்திற்குத் தினமும் பஸ் ஏறிப்படிக்கப்போய்வருகிறாள். முன்னேறிவரும் விஞ்ஞான யுகத்தில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளைவிடக் கொம்பியூட்டர் சயன்ஸ், எக்கவுண்டன்சி போன்ற தொழில்ரீதியான படிப்புக்கள் விரைவான பதவியும் பணம்சம்பாதிக்கும் வழிகளையும் தரும் என்று கமலா நம்பினாள். சினிமாத் தியேட்டர்களையே மூடிவிடும் அளவிற்கு இலங்கையில் ரி.வி.யுகம் வந்துவிட்டது. அடுத்தது எலெக்ரோனிக் கொம்பியூட்டர் யுகந்தான். அரசாங்க காரியாலயங்களிலும் தனியார் கடைகளிலும் கொம்பியூட்டர் சாதனங்களை அறிமுகப்படுத்தும் காலம் நெருங்கிவிட்டது. மேலும் இந்த விஞ்ஞானத்தைத் தெரிந்துகொண்டால் சிங்கப்பூர், மத்தியகிழக்கு, லண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பளமாகப் பெறமுடியும் என்று அவள் தெரிந்துகொண்டாள். ஜி.சி.ஈ. (சாதாரண) ஆங்கிலத்தில் திறமைச் சித்தி எடுத்திருந்தாள்.

ஊரிலுள்ள விசேட அபிவிருத்திச்சபை நூலகத்திற்குப் போய் ஆங்கிலப்பத்திரிகைகள், வெளிநாட்டுச் சஞ்சிகைகளை வாசித்துவந்தாள். அழகும் சுறுசுறுப்பும் நிரம்பிய கமலா ஊரின் சராசரிப் பெண்களைவிடவும் வித்தியாசமான அறிவுஜீவியாகவே தென்பட்டாள்.

தன்னோடு பேச்சுக்கொடுக்கும் எவருடனும் அவரவர் அறிவுக்கும் போக்கிற்கும் ஏற்பச் சரளமாகப் பேசத் தெரிந்துகொண்டாள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் கொம்பியூட்டர் சாதனங்களைப் பற்றிப் படித்து வந்தாள்.

தினமும் காலையில் பஸ்சிற்காகக் காத்து நின்று இடம் கிடைக்காமல் நெரிபட்டும் இடிபட்டும் கஷ்டமான பிரயாணம் செய்துவந்தாள். சின்ன மினிவான்களில் ஏறி அவள் இடம் கிடைக்காமல் குனிந்து நிற்கும்போது அவள் மேனியை வட்டமிடும் கழுகுக் கண்கள்தான் எத்தனை? தனக்குப்பரிந்து இடம்தருமாப் போல சற்றே நகர்ந்து 'இப்பிடி இரும் பிள்ளை' என்று சொல்லும் வயது போனவர்களின் கள்ள மனங்களை அவள் நன்கு அறிவாள் பெண்ணாகப் பிறந்தவள் படிக்கவும் வேலைக்கும் என்று வெளியே கிளம்பிவிட்டால் வீடுவந்து சேரும்வரையில் எத்தனைபேருடைய பார்வைகளுக்கும் அருவருப்பான சில்மிஷங்களுக்கும் ஆளாகவேண்டி இருக்கிறது. இவர்களுக்குப் பயந்து சதாவீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடக்க முடியுமா? பாரதி விரும்பிய புதுமைப் பெண்களாகவாழவேண்டாமா

யாழ்ப்பாணத்தில் எங்காவது வெடிச்சத்தங்கள் கேட்டால்போதும், உடனே மினிவான்கள் அறிப்புடைத்துக் கொண்டு ஓடும். பஸ் ஓட்டங்கள் நிறுத்தப்படும். இப்படியான இக்கட்டான தருணங்களில் ஸ்ரான்லி வீதியில் இருந்து அவளைப்பாதுகாப்பாகக் கூட்டிக்கொண்டுபோய் வாகனங்களில் ஏற்றி ஊருக்கு அனுப்ப ஒரு புண்ணியவாளன் இருந்தான். அவளோடு ஒன்றாகப் படிக்கும் சேகர்தான் அவன். சேகர் யாழ்ப்பாணத்தில் தனியார் முதலீட்டு நிறுவனம் ஒன்றில் எக்கவுண்டன்ஸ் கிளார்க் ஆகவேலைபார்த்தான். அவனது திறமையில் நம்பிக்கை கொண்ட அந்த ஸ்தாபனம் தனது எதிர்காலவளர்ச்சிக்காக கம்பியூட்டர் விஞ்ஞானப்படிப்பை மேற்கொள்வதற்கு என்று ஸ்கலர்ஷிப் வழங்கியிருந்தது.

வகுப்பில் சேகரும் கமலாவும் போட்டிபோட்டுக்கொண்டு திறமைசாலிகளாக விளங்கினார்கள் திறமையும் அழகும் ஒருங்கே அமைந்த சேகரைக் கமலாவும் விரும்பினாள். இருவரும் மனம்விட்டுத் தமது பிரச்சினைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் ஆராய்ந்தனர். சேகரின் தகப்பனார் ஒரு சலவைத்தொழிலாளி ஆனால் தான் கஷ்டப்பட்டு மகனைப் படிக்கவைத்து முன்னேறச் செய்தார், பரம்பரைத் தொழிலை அவனுக்குப் பழக்கவில்லை கமலாவின் குடும்பநிலையும் சங்கரின் கடும் உழைப்பும் சேகருக்குநன்கு தெரியும் கமலாவுக்குத் தன் அண்ணனின் புரட்சிகரமான மனப் போக்குத்தெரியும். அம்மா தான் பரம்பரை, மானம், மரியாதை என்று பீற்றிக்கொண்டாலும் நல்லசிந்தனையாளரும் சிறந்த உழைப்பாளியுமான சங்கர் தன்விருப்பத்தை நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கையுடன் கமலா தன்காதல் செடிக்கு நீர் ஊற்றி வளர்க்க ஆரம்பித்தாள்.

கமலா தன் முன்னேற்றங்கள் பற்றி அவ்வப்போது தமையனுக்கு மறைக்காமல் கடிதமூலம் தெரிவித்து வந்தாள். சேகரைப் பற்றியும் ஒளிவு மறைவின்றி எழுதியிருந்தாள், கமலாவின் [illegible] மையான போக்கில் [illegible] கொண்ட சங்கர் அவளது மனப்போக்காமல் புத்திமதிகளை எழுதினான். காதலுக்குத்தான் எதிர்ப்பில்லை எனவும் ஆனால் ஆண்களைப் பற்றித் தீர ஆராய்ந்து சந்தேகமற்ற முடிவுக்கு வந்தபிறகே பெண்கள் தம்மை அவர்களுக்குஒப்படைக்கவேண்டும்என்றும் எழுதினான். மற்றச்சகோதரிகளைப்போலவே கமலாவுக்கும் வஞ்சனை இல்லாமல் பணம் தருவதாகவும் இம்முறை ஊருக்கு வந்து கமலாவின் திருமணத்தை நிறைவேற்றிவிட்டு மறுபடியும் குவைத் வந்து உழைத்துக் கடைசியாகவே தான் திருமணம் செய்துகொள்ளப் போவதாக எழுதினான்.

கமலா தனக்கும் சேகருக்கும் கொம்பியூட்டர் சயன்ஸ் சம்பந்தமான வேலைகள் வரும்போது விண்ணப்பம் அனுப்பி உதவும்படி எழுதினாள். சங்கர் குவைத் டைம்ஸ், அராப் டைம்ஸ் என்பனவற்றின் விளம்பரப் பகுதிகளை நிரப்பித் தொடர்ந்து நாலு நாட்களுக்கு இலவச விளம்பரங்கள் வரச்செய்தான். குவைத் பத்திரிகைகளின் விளம்பரப்பகுதி நல்லசேவை செய்து வருகிறது. சங்கர் ஒரு தடவை பேனா நண்பர் பகுதிக்கு விளம்பரஞ் செய்துபிலிப்பைன்ஸ், மணிலா, வடஅமெரிக்காவில் இருந்தும் அவனது நட்பைக் கோரிக் கடிதங்கள் வந்தன செலவுக்குப் பயந்து தொடர்புகளை இடையில் நிறுத்திவிட்டான்.

இந்தமுறை சங்கர் லீவுக்கு யாழ்ப்பாணம் வந்தபோது முருகேசம்மான் அவனை எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்கவில்லை கமலாவின் காதல் விவகாரம் அவருக்கும்தெரிந்து 'ஆரோ சாதிகுறைஞ்சவனோட யாழ்ப்பாணத்திலை சுத்துறாளாம் உன்ரை அருமைத்தங்கச்சி... இந்தக்காலத்துக் குமரியளைப் பஸ் ஏறிப் படிக்க விட்டால் அவை நல்ல சுகமாக மாப்பிள்ளை பிடிக்கினம்... பிடிச்சவள் ஒரு ஆனவனைப் பார்த்துப்பிடிக்கவேண்டாமே' என்று நெளிக்கத்தொடங்கிவிட்டார்.

"அம்மான் கணக்கக்கதை யாதையுங்கோ...... நீங்கள் சாதிக்காறர் எண்டாப்போலை போன ஆடிக்கலவரத்திலை உங்கட பிள்ளையளுக்கு அவங்கள் அடிக்காமல் விட்டவங்களே... எத்தனைதரம் அடி, உதை வாங்கியும் உங்களுக்கு இன்னும் அந்தப் பரம்பரைப் புத்தி போகேல்லை... என்ரை தங்கச்சிக்கு நான் விரும்பின இடத்திலை செய்வன். சேகரின்ரை படிப்பு உங்கட பிள்ளையள்கூடப் படிக்கேல்லை ஏன் இந்த ஊரிலையே ஒருதரும் படிக்கேல்லை நாளைக்கு அவன் வெளிநாடு போனால் முப்பது முப்பத்தையாயிரம் எண்டு சம்பளம் வாங்குவான். பிறகு வந்து காரும் பங்களாவும் என்[illegible] காசை வீசி எறிஞ்சால் [illegible] போவியள் [illegible] நம்பிக்கை நாக்காலே எதையும் கதைக்கலாம். கதைவளுக்கு ஒரு நியாயம் இருக்கவேணும்,"

சங்கர் பொரிந்து தள்ளினான்.

தரகருக்குச் சப்போட்டாகக் கதைக்க வந்த தாய் மகனுடைய கோபத்தைக் கண்டு மெதுவாக உள்ளே போய்விட்டாள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கோவில் ஒன்றில் கமலா - சேகர் திருமணம் அமைதியான முறையில் நடைபெற்றது.

சேகர்யாழ்ப்பாணத்திலேயே வாடகை வீடொன்றில் கமலாவுடன் வசித்து வருகிறான்.

சங்கரின் கிராமத்தில் மழை நன்றாகப்பெய்து நிலமும்

(9-ம் பக்கம் பார்க்க)

## 'சோதினை! சாதனை! வேதினை!'

"'சோதினை! சோதினை! எத்தனை சோதனை!"

"'வேதினைதானே தமிழன் சீதனம்!
வவுனியா என்றும் திருமலை என்றும்
பவனியாய் எங்கே அகதிகள் இன்று!
வேதினை சோதினை சோதினை வேதினை
மேதர், நான் சொன்னது பள்ளிச்சோதினை
என்ரைமகனுர் எடுக்கிற சோதினை!

உன்ரை மகனுமே சோதினை எடுக்கிறான்?

என்ரை அண்ணே! என்ன நக்கலே?

படிச்சவன்தானே பரீட்சை எடுக்கலாம்

இல்லை அண்ணே! இடாப்பிலை இருக்கிற
எவரும் இப்பபரீட்சை எடுக்கலாம்
சத்தியன் இப்ப பத்தாம் வகுப்பு

அப்ப மார்கழிதானே சோதினை!
ஐப்பசி பிள்ளைன் அந்தரப் படுகிறீர்?

இப்ப அப்பிடி இல்லையாம் அண்ணே!
மார்கழிச் சோதினைக்கிருக்கமுந்தி
ஆர் ஆர் சோதனை வைச்சாலும் அதை

எடுத்துத் துலைக்கவேணுமாம் அண்ணே!

ஏனும் அப்பிடி......?

இது விளங்காதே?
சோதினை எழுதப்பரீட்சை வேணுமாம்!

சோதினை தானே பரீட்சை!

அண்ணே,
பரீட்சை எழுதப் பரீட்சை வேணுமாம்!

பரீட்சை எழுதப் பரீட்சையா...?

அண்ணே,
மார்கழிச் சோதினை எழுதமுந்தி
ஆர் ஆர் சோதினை வைக்கின்றார்களோ
அவற்றை எல்லாம் எழுதினால்,
இவற்றை அறிவுடைரும் எங்கினம்!
பரீட்சை எழுதப் பிறக்ரிஸ் வேணுமாம்!

மண்ணுங்கட்டி! நல்ல பிறக்ரிஸ்!
சிலபஸ் முடியமுன் என்ன பிறக்ரிஸ்,
முழுசாய் ரெண்டு பாதம் கிடக்குது,
பழுதாக்காமல் படிக்கலாம் தானே?
படிச்சு முடிச்ச பிறகுதானே
பரீட்சை எழுதவேணும்? சண்முகா!
ஆர் ஆர் சோதினை வைக்கினம்...?

அதுவே,
பரீட்சைத் திணைக்களம் சோதினை வைக்கமுன்
பள்ளிக் கூடம் ஒன்று வைக்குமாம்
அக்கம் பக்கம் பள்ளிகள் சேர்ந்து
அதுக்குப் பிறகு ஒன்றை வைக்குதாம்
பிறிஞ்சிப் பலுக்குத் திருந்தி இல்லாட்டிப்
பிறகும் ஒன்று பெரிசாய் நடக்குமாம்!
சோதினை இப்பிடி ஆறோ ஏழோ...
சாதனை வீரன் ஆகப்போகிறான், சத்தி
என்ன சண்முகம்...? சிவசிவா!

மேதர், அண்ணே! சோதினைப் பட்டியல்
முடியவில்லை, இன்னும் ஒன்றிருக்குது!
மன்றம் ஒன்றும் சோதினை நடத்துதாம்!
என்றான் சத்தி! ஏனடா என்றன்
கட்டிட நிதிக்காய் என்கிறான் அண்ணே!

கெட்ட மனிசர்! பாத்தியோ சண்முகம்!
பரீட்சை போகிற பாதையைப் பாத்தியோ?
பணம் பண்ணத்தான் பரீட்சை நடக்குது!
படிக்கப் படிக்க வாத்தியார் வைக்கிற
பரீட்சை வடிவாய்க் காணும் காணும்,
பொதுச் சோதனையும் ஒன்று போதும்
பணம் பண்ணத்தான் இந்தப் பரீட்சைகள்

படிப்பையும் எல்லே குழப்பி விடுகுது!
எத்தினை சோதினை எழுதவும் தயார், என்
உத்தம புத்திரன் சத்தயராசா!

சத்தியம் செத்து விட்டது சண்முகம்
சத்திய ராசனை ஏன் குறை சொல்லிறை?
மன்றம் நடத்தினால் என்ன, எங்கடை
பிறின்சிப்பல் மார் நடாத்தினால் என்ன
உறிஞ்சப் படுவது உன்ரை காசு தான்!
அகதிகள் புனர்வாழ்வுக்காய் என்றொரு
பதி, நாளை பரீட்சை நடத்தலாம்
சத்திக்கு இதுதான் முந்தி அண்ணே!
புத்தி மத்திமம்! புளுகிறான் அண்ணே
படிப்பு துனி இல்லை பரீட்சைதான் என்று

குடுக்கிற குடுவையில் குழறிக் கொண்டு
மார்கழி மட்டும் படிக்க மாட்டேனே
சத்தி! உன்ரை சாதனை வீரன்!
அடிதான் அண்ணை மருந்து நான் வாறன்

— சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு

தொகுப்பாசிரியர்: வித்துவான் தி.பட்டுச்சாமி ஓதுவார்

வெளியீடு:ஈழத்துச் சிவனடியார் கூட்டம், திருக்கேதீச்சரம்

விலை:20 ரூபா

சைவமக்கள் வாசிக்கவும் பூசிக்கவும் தக்க பண்புடன் இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தகுந்த ஆதாரங்களுடன் கேதீச்சரப் பெருமையை உணரத் தக்கதாக நூலாசிரியரான திரு.பட்டுச்சாமி ஓதுவார் செய்த பணியின் சிறப்பாலேயே இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது என்பது உண்மையேயாகும்.

திரு பட்டுச்சாமி ஓதுவார் எழுதிய தோற்றுவாய் என்னும் 1 ம் அத்தியாயம் சிவாலயம் 'சிவமூர்த்தங்கள்' ஆலய வழிபாடு முதலியவை பற்றி சைவசமயிகள் ஒவ்வொருவரும் அறியவேண்டிய உண்மைகளைத் தொகுத்தும் விளக்கியும் கூறியுள்ளமை சைவ மக்களுக்குப் பெரும் பயனைத் தரும் அம்சமாகும்.

''திருச்செந்தூருக்கு அருகில் உள்ள குலசேகரம் பட்டினம் என்ற கடற்கரையூர் ஆதியில் தென்னாட்டுத் துறைமுகமாக அதன் எதிராகஇலங்கை மாதோட்டத் துறைமுகம் சிறந்து விளங்கிற்று'' என்பது போல நூலில் வரும் சரித்திரக் குறிப்புக்கள் பல உண்மைகளை உணர்த்துவதாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் விளங்குகின்றன.

திருக்கேதீச்சரப் பதிகங்கள், பொது-துதிப்பாடல்கள் என்பனவற்றோடு மகாதுவட்டா, அகத்தியர் ஆகியோர் கேதீச்சரப் பெருமானைத் துதித்ததுகளும் கூட இந் நூலில் இடம் பெற்று நூலின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளன

இரண்டாம் பதிப்பாகவெளிவரும் வேளையில் இந் நூலைப் பதுக்கித் தொகுத்த திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவரின் பங்களிப்பு சமய அறிஞர்கள் ஒவ்வொருவரும் இந்நூலைப் பொன்னே போல் பேணிப் படிக்கத் தூண்டுவதாய் உள்ளது

'மூவர் முதலிகளும் திருக்கேதீச்சரமும்' என்னும 15 ம் அத்தியாயம் திருக்கேதீச்சரப்பெருமை கேதுநாதரின் பெருமைதிருமுறைகளின் இனிமை - திருமுறைகளின் புதைந்து நிறைந்துள்ள மகிமைகள் போல்வனவற்றை சுவைக்கச் செய்கின்றது.

''சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய பாடல்கள் தூரத்தில் நின்றுற்றிய 'படக்கைப் பரவல்' பாடல்கள் என்ற அளவில் அமைந்தனவல்ல; பக்கலில் நின்றேர் திருக்கேதீச்சர மகிமை பற்றித் தேவரீர் பாடியருள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது போலவும், அவர்கள் வேண்டுகோளுக்கு விடையிறுத்தது போலவும்... அமைந்திருக்கின்றன' என்பன போன்ற திருமுறைகள் பற்றிய குறிப்புக்களை உதவும் சிறப்பாலேயே இந் நூல் தனித்துவமான பயன்களை உதம் பெருமையை பெறுகின்றது. பெருபயனைத் தருகின்றது.

## புதிய புத்தகம்

மண்ணை நெல்லாக்கித்தந்த விவசாயியைப் போலத் திருவாசக மடம் என்ற போர்வையுள் மறைந்திருந்து திருவாசக மடத்துக்குச் சிறப்பளிக்கும் சிவனடியார் சிவத்திரு சி சரவணமுத்து சுவாமி அவர்களுக்கு சைவ உலகம் என்றும் நன்றிசெலுத்தும் வகையில் இந்நூல் வெளியீடு பரந்து நிலவும் என்றே சொல்லலாம்.

சிறிய எழுத்துக்களால் அமைந்த நூல்களைப் படிக்க அஞ்சுவோர் -தயங்குவோரைக் கருத்தில் கொண்டு இத்தகையவர்கள் அதாவது நூற் பயிற்சி குறைந்தவர்கள், கண் பார்வை மயங்கியவர்களும் எளிதில் வாசித்து உணரத்தக்க வகையில் அமைந்த அச்சுப்பதிவும் இந்நூலைப் பலரும் பயனடையச் செய்யும் என்பது உறுதி.

★

## முத்துமாரியம்மை பதிகம்

பாடலாசிரியர்கள்:
க. சோமசுந்தரப்புலவர்
நவநீதகிருஷ்ணபாரதியார்
சி கணேசையர்
வெளியீடு:- பொ. செகந்நா (தன்

விலை;-2 ரூபா 50 சதம்

கிடைக்குமிடம்:சரஸ்வதி புத்தகசாலை இல 2. பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விளங்கும் ஏழு தீவு நாடுகளுள் 'லைடன்' தீவைச் சேர்ந்த வேலணையூரின் கிழக்குப் பகுதியில் பெரிய குளம் என்னும் குளத்தின் பக்கத்தில் விளங்குவது முத்துமாரியம்மன் ஆலயமாகும்.

இவ் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முத்துமாரியம்பிகையைத் துதித்து மூன்று தமிழ்ப் புலவர் மணிகள் பாடிய பாடல்களுடன் இந் நூல் விளங்குகிறது

பொய்மையாளரைப் பாடாது பாடும் புலவர்களுக்குக் குப் பாட்டுடைத் தலைவியாக வேலணையூர் முத்துமாரியம்மை விளங்குகின்றள்.

நடராசப்பெருமான்'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று மணிவாசகர் முன் இருந்து திருக்கோவையாரைப் பாடச் செய்தார்.

---

வேலணையூர் முத்துமாரியம்மையாரோ தன் அன்பர்களை தமிழ்ப் பெரும் புலவர்கள் இருக்குமிடம் அனுப்பி அப் புலவர்களுக்குப் பாடும் பணியை வழங்கியருக்கிறர். அப் பாடல்கள் புத்தகருபமாக அனைவருக்கும் கிடைக்கும் நிலை உருவானதும் அம்பிகையின் அருள் என்றே கருத வேண்டியுள்ளது.

பாடல்கள் ஒவ்வொன்றும் இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் சக்தி தத்துவமும் நிறைந்து விளங்குகின்றன.

'மாமாரித் தாயே பொன்னா மும்மல வேரற அருள் மழை பொழியும் திருவிழியும்... தாமரை அடியும் கண்டுகள் பெறுநாளெந்நாளோ' என்று அம்பிகையைக் கேட்பதும், 'சற்றேனும் மெய்ப்பத்தியிலாதேன் தவறு பொறுத் தருள்வாய்' என்றும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அம்பிகையை வேண்டுவதும் இந் நூலில் உள்ள பக்திச் சுவைக்கு இனிய எடுத்துக் காட்டெனலாம்.

'ஊழையும் உப்பக்கப் காணெனக அன்பருக் குபாயமுங் காட்டியருள் வோய்'என்னும் தொடர் நவநீதகிருஷ்ண பாரதியாரின் கவித்துவம், தமிழறிவு, அம்பிகை அடியார்க்கு அருளும் முறை என்பவற்றை நன்கு படம் பிடித்துக் காட்டிடும் சிறப்புடையதாயுள்ளது.

'நாத முதலாகியுள தத்துவங்கள் தனைக் கடந்த நாதனொடும் பேதமிலாது உறைகின்ற பராபரை என்று அம்பிகையின் உயர்ந்த நிலையை சித்தாந்த நோக்கில் கண்டு கவி புனைகின்றர் வித்துவ சிரோமணி கணேசையர் இத்தகைய பாடல்களால் பொலியும் இன் நூல் அம்பிகை அடியார்களால் அருஞ் சொத்து என்று விரும்பத் தக்கதாய் உள்ளது.

பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்,

# குலசேகரம்

(விட வைத்திய நூல்)

ஆசிரியர்: வைத்தியகலாநிதி க பாலசுப்பிரமணியம் (பிரதம ஆராய்ச்சியாளர், இலங்கா தமிழ் வைத்திய ஆராய்ச்சி மன்றம் )

விலை;ரூபா 10

பாம்புகடித்து இறப்பவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் இலங்கை மூன்றுவது இடத்தை வகிப்பதாக, உலக சுகாதார தாபனத்தின் கணிப்பிலிருந்து தெரியவருகின்றது இந்த நிலை ஏன்? இவ்வாறு அவமாக இறப்பதைத் தடுப்பது எப்படி? என்று யாரும் சிந்திக்காத நேரத்தில் டாக்டர் க.பாலசுப்பிரமணியம் பாம்பு கடி வைத்தியத்தில் தனது ஆராய்ச்சிகளின் கண்ட உண்மைகளையும் அனுபவ மருந்துகளையும் தமிழ் தெரிந்த எல்லாருக்கும் பயன்படக் கூடியதாக ''குலசேகரம்'' என்ற தங்கள் குடும்பப் பெயரில் எழுதிய தற்காக தமிழுலகம் அவரை பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நூற்றுண்டுகளாக பிரபு பெரிய பரிகாரியார் குடும்பத்தினரால் இரகசியமாக பேணப்பட்டு வந்த விட வைத்தியம் 23 தலைமுறைகள் அனுபவத்தில் கை கண்டதுமான சிகிச்சைகளை எளிய தமிழில் எழுதப் பட்டுள்ளது.

1982 ம் ஆண்டு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த 3வது சர்வதேச மாற்று மருத்துவ மாநாட்டில் ''சித்த வைத்தியத்திற்கும் அக்குபஞ்சருக்கும் உள்ள ஒற்றுமை'' என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தமைக்காக, மாற்று மருத்துவ மூலம் இலங்கையில் 2000 ஆண்டளவில் சகலருக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்த நியமிக்கப் பட்ட குழுவின் அங்கத்தவராக ஆசிரியர் தெரிவு செய்யப் பட்டவராவர். உலகசுகாதார தாபனத்தின் அந்நோக்கத்தை நிறைவேற்ற பெரிய பரிகாரியார் ஞானகாரிகசித்த வைத்திய சங்கத்தினர் தமது மூன்றுவது நூலாக இந் நூலை வெளியிட்டுள்ளதை தமிழினம் ஆவலுடன்வரவேற்கும்.பெரிய பரிகாரியார் குடும்பத்தில் பிரபு தண்டிகை குலசேகரம்பிள்ளை பாம்பு கடி வைத்தியத்தில் மிகுந்த சித்தியும் கீர்த்தியும் வாய்ந்தவராகையால் அவருடைய பெயரில் நூலை வெளியிட்டுள்ளமை மிகவும்பொருத்தமானதாகும்,

இந் நூலில் தற்காலம் காணப்படும் பாம்புகளைப் பற்றி ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது அவற்றை ஏடுகளில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள், அவற்றிற்கு ஊரில் பொது மக்கள் வழங்கும் பெயரென்ன? பாம்புகள் விடமுள்ளனவா என்றுஎவ்வாறு கண்டு பிடிப்பது? உண்மையில் விடப் பாம்பு தான் கடித்ததா? என்பவை பற்றி ஆசிரியர் தனது ஆராய்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளார் பாம்புகள் கூடுதலாக கடிப்பதற்கான காரணங்கள் என்ன? இதனை எவ்வாறு தடுக்கலாம் பாம்புக் கடிக்கு முதலுதவி, விடத்தின் வேகத்தை தணிப்பதற்கும், உயிரை வதை தடுப்பதற்கும் ஆரம்ப சிகிச்சைகள் இவை எல்லா விடங்களுக்கும் பொதுவானவை சீவ, தாது, தாவர (அலரிக்காய் உட்பட) விடங்கள், மருத்தீடு, நவீன நஞ்சுகள், இவற்றிற்கான சிகிச்சைமுறைகள், பத்தியங்கள் விடங்களுக்கான நவீன மருந்துகள் இவை ஏன் இலங்கையில் எதிர்பார்த்த வெற்றி அளிக்கவில்லை என்றது பற்றிய ஆராய்ச்சி, நவீன நஞ்சுகளின் பாதிப்பில் இருந்து காக்கும் வழிவகைகள் எல்லாம் விபரமாக எழுதப் பட்டுள்ளது.

விஷ வைத்திய பூஷணம்
லோ. மரியநாயகம்

# மல்லிகையும் நானும்

ஈழத்து இலக்கியச் சோலையில வாசகரோடு கைகோத்துத்தன் வாசனையைப் பகிர்ந்து கொண்டு மல்லிகை தன் 21வது இளமைப் பருவமலராக மலர்ந்துள்ளது.

அக்குவேறு ஆணிவேறாக விமர்சிப்பது எனது இங்கு நோக்கமல்ல ஏனெனில் மல்லிகையின் படைப்பாளிகளும், வாசகர்களும் இந்தக்கலையில் இராமபாணம் போன்றவர்கள் [உதாரணம் மலரில் வெளியாகியுள்ள கவிஞர் முருகையனின் கட்டுரை)

சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் விமர்சனங்கள் என்ற இலக்கியத்தின் பல்வேறு வடிவங்கள் மூலம் படைப்பாளிகள் பல்வேறு பிரச்சனைகளையும், கருத்துக்களையும் தங்கள் ஆக்கங்களின் கருப்பொருளாக்கியிருக்கிறார்கள்

.20 பக்கங்களைக்கொண்ட இம்மலரில் 'ஜீவா'விக்சலியாத சிரமமிக்க உழைப்பின் வெளிப்பாடு தெளிவாக விழுந்துள்ளது

இன்றைய ஈழவரின் இடர்களை உடைத்தெறிந்து வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் கலை இலக்கிய வடிவங்கள் அவசியப்படும் காலகட்டத்தில் நிற்கும் தம்மவர்களுக்கு இப்போதிருக்கும் இலக்கியப்பசி 'யானைப்பசி';

இந்தப்பசிக்குத் தீனிபோட 120 பக்கங்களில் களம் அமைத்துக் கொடுத்துள்ள 'ஜீவா'வின் பணியை படைப்பாளிகள் சரியான படியாக பிரயோசனப்படுத்தவில்லையென்றால்அது ஜீவாவின்பிழையல்ல.

## நான்

மலர் 11 இதழ் 5

'நான்' புரட்டாசி, ஐப்பசி ஆகிய இருமாதத்திற்குரிய இதழ் கிடைக்கப்பெற்றது.

'தாழ்வுச்சிறையினைத் தகர்த்தெறியுங்கள்; தன்மானமுள்ளவராய் வாழமுனையுங்கள் என்ற ஆசிரியரின் அறைகூவலுடன் வெளிவந்துள்ள இவ்விதழ் தாழ்வு மனப்பான்மை பற்றிய விஞ்ஞான உளவியல் ரீதியான ஆய்வுக் கட்டுரைகள் அதனோடு தொடர்புடைய சிறுகதை, கவிதை ஆகியவற்றை உள்ளடக்கிய ஆழமான கனத்துடன் வெளிவந்துள்ளது.

தாழ்வுச்சிக்கல் என்பதே சிக்கலான பிரச்சனை. காலத்திற்குக்காலம் அதற்கான அகக்காரணிகளும், புறக்காரணிகளும் மாறுபட்டுக் கொண்டேவந்துள்ளன. மன்தன் முன்னேற்றத்தை முறியடித்துத் தாழ்நிலைக்குத் தள்ளும் இந்த உளவியல் பிரச்சனைக்கு விரிவான விளக்கங்களையும் ஆய்வுகளையும் கொடுப்பதன் மூலம் அதன்கொடுப்பிடியிலிருந்து மனிதனை மீட்டெடுக்கமுடியாது. இருப்பினும் தன்னைச் சூழவுள்ள நிகழ்வுகளினுல ஒருவன் தான் எவ்வாறு பாதிக்கப்படுகிறன் என்பதை உணர்வு பூர்வமாகப் புரியச்செய்து அதனைவொட்டிய விழிப்புணர்வுக்கு ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கும் அறிவுத்தூண்டலாக 'நானி'லுள்ள விஷயங்கள் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கதே.

'நான்' நாமெல்லோரும் அவசியம் படித்து உணரவேண்டிய சஞ்சிகை என்பதில் இருவேறு கருத்து இருக்காது.

— தீபன்.

# கந்தவேள் கோட்டம்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

திலிருந்து பணிக்கன் ஒருவன் வந்தான். அவனை அரசன உபசரித்து, அவன் தேசவலிமையிலும் வாட்போர்த் திறத்திலும ஈடுபட்டவனுய்த் தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான்......''

நந்தவேதியை அவன் கரம் பிடித்தபோது. மாதோட்டத்துத் துறவியை ஒரு கணம் எண்ணிக்கொண்டாள்,

நந்தவேதிக்கும் சதாசிவப் பெருமாளுக்கும் இடையில் மலர்ந்த காதலுக்குப் பராக்கிரமபாகு தடை செய்யவில்லை அவர்கள் திருமணம் நடந்த தினத்தில் ஜயவர்த்தனபுரக்கோட்டை மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கியிருந்தது.

''நந்தா......''என்றுன் சதாசிவப்பெருமாள்,

''என்ன......''

''உன் அழகு எங்கே நான் எங்கே...செந்தாமரைபோன்ற உன் மேனி நிறத்திற்கும் கரிய என் உடலுக்கும் எப்படிப் பொருந்தும.....?''

''அவள் அவன் உதடுகளில் கரம் பதித்து அவனைப் பேசவிடாது தடுத்தாள்.

''ஆண்களுக்கு நிறம் அழகல்ல. உடல் வலிமைதான் அழகு,

அவர்கள் வாழ்க்கை ஆனந்தமாகக் கழிந்தது.

அவர்கள் இல்லறத்தின் இனிய மலர்ச்சியாக முதலாண்டுக் கழிவில் ஆண் குழந்தையொன்றுக்கு நந்த தேவி தாயானுள்.

''நீதா...'' என்றுன் சதாசிவப்பெருமாள் வஞ்சையுடன்

''உங்களைப்போலவே உங்கள்மைந்தன் இருக்கிருன். அவனுக்கு என்னபெயர் வைக்கப் போகிறேன் தெரியுமா?'' என்று நந்ததேவி கேட்டாள்

''ஏன் நந்தா... என்ன பெயர்?''

''சப்புமல்குமாரய ......'' என்றுள் அவள் அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான

''பெயர் பிடிக்கவில்லையா?' என அவள் கேட்டாள், கவலையோடு

''உனக்குப்பிடித்தால் எனக்குந்தான் நீ வைத்தது போல நானும் ஒருபெயர் அவனுக்கு வைக்கட்டுமா? ....

மாதோட்டத்து மயிலின் அகவல் அவள் காதுகளில் திடீரென ஒலித்துநிறைந்தது.

''சொல்லுங்கள்... எங்கள் புத்திரனுக்கு இரு பெயர் இருக்கட்டுமே?''

அவன் சொன்னுன்:
''செண்பகப்பெருமாள்''

# ஸ்பிரிற் அபாயம்

மதுசாரங்கள் பெரும்பாலும் ' ஸ்பிரிட்'' என்னும் மதுவகையைச் சார்ந்தது ஆகும்.

விஸ்கியில் 40% முதல் 47%
ரம்பில் 51% முதல் 59%
சாராயம் 51% முதல் 59%
பியர் 2.5% முதல் 5%வரை

நாம் குடிப்பது மதுதான் ஆனால் ''ஸ்பிரிட்டை'' யும் சேர்த்து அருந்துகின்றோம். மதுவும் ... ஆகும்.

— ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சிறுகதை

# உணர்வுகள்

கோண்டாவிலூர் பூ. கி. இராசரத்தினம்



முப்பத்தேழு வருடங்கள் உருண்டோடின நினைவில் நின்றவை படிப்படியாக அகன்றன. எனது முப்பத்தேழு வருட ஆசிரிய சேவைக்காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமை அடைவதுண்டு.

வயது அறுபதாகியதும் நான் இளைப்பாறினேன். கற்பித்தல் கடினமான தொழில் என்பதனை இன்றும் உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் மகிழ்ச்சிகரமான தொழில் என்பதனையும் மறுக்க முடியவில்லை. முதுமையும் வறுமையும் வாழ்க்கை பஞ்சணை மெத்தையல்ல என்பதனை அடிக்கடி நினைவுபடுத்தத் தவறவில்லை.

எனது இரண்டு ஆண் பிள்ளைகளும் குடும்பஸ்தர்களாகி புறம்பாகக் குடித்தனம் நடத்தினார்கள். அவர்களின் வருமானம் அவர்களுக்கே போதுமானதாக இருந்தது. அவர்களிடம் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. எனது சேவைக்காலத்தில் மிகக் குறைவாகவே சேமிக்க முடிந்தது. ஆசிரியனுடைய ஊதியம் பொதுவாக மிகக் குறைவானதெனப் பலர் பேசுவதுண்டு ஆனால் பரிகாரம் கிடைப்பதில்லை. எனது இளைப்பாற்றுச் சம்பளம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் சேமிப்பும் கரைந்தது. எனது இளைப்பாற்றுச் சம்பளம் சம்பந்தமான பத்திரங்களைக் கொண்டகோவை காரியாலயத்தில் பல பகுதிகளிற்கும் சுழலத்தொடங்கியது. சில பகுதிகள் பூரணப்படுத்தப்படவில்லை என விளக்கொத்து இடையிடையே என்னை வந்தடைந்ததும் நான் ஓடி ஓடி அலுவல்களைப் பார்த்தேன். காரியாலத்திற்குச் சென்றால் பல லிகிதர்களைச் சந்திக்க வைத்தார்கள். சிலருக்கு என்னைக் கண்டால் சிரிப்பு, அது நகைப்பாகவும் மாறியதுண்டு. வறுமையின் உணர்வுகள் உதயமாகின நான் காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கு உள்ள ஆசனத்தில் அமர்ந்தேன். துணிவை வரவழைத்துக் கொண்டு பிரதம லிகிதரிடம் சென்றேன். "ஐயா, தயவு செய்து எனது கோவையை உதவிச்செயலாளரிடம் சமர்ப்பித்து ஆவன செய்து தரவும். நான் என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன்" எனக் கூறினேன் "உங்களுடைய கோவையில் சில பத்திரங்கள் இல்லாத காரணத்தினால் முன்பு நீங்கள் சேவை புரிந்த பகுதிக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன" என்று லிகிதர் கூறினார்.

"எப்பொழுது பத்திரங்கள் கிடைக்கும்?" என தாழ்மையாக வினவினேன். "அது எப்படி எனக்குத் தெரியும். எனக்கு முன்னால் பேய்க்குப் படைத்தது போல் படைக்கப்பட்டிருக்கின்றன சில வேளை இதற்குள் இருக்குமோ......" இரண்டு நிமிடங்களின் பின்பு, "எல்லாம் பூரணப்படுத்தப்பட்ட பின்பு உமக்கு அறிவிக்கப்படும் அடிக்கடி வந்து தொந்தரவு செய்ய வேண்டாம்" பின்பு அவர் தேநீர் குடித்துக் கொண்டு குறும்பாகப் பேசினார். "மூன்று வருடங்களிற்கு மேல் இளைப்பாற்றுச் சம்பளம் பலர் பெறாமல் இருக்கும் பொழுது இவர் ஒரு வருடத்திற்குள் பெற்றுச் சாதனையை நிலைநாட்டப்பார்க்கின்றார்" என்றார் பிரதம லிகிதர் அருகில் உள்ளவர்கள் சிரித்தார்கள். அவை வெந்த புண்ணில் வேல் ஏற்றியது போல் இருந்தன.

'நான் நீண்ட நாட்களிற்கு உயிருடன் இருப்பேனா' என எனனுக்குள் கூறி கொண்டேன். "ஐயா நான் உதவிச் செயலாளரை நேரே சந்திக்க உத்தரவு தருகிறீர்களா?" எனத் துணிவுடன் கேட்டேன். "எப்படிப்பட்ட மனிதர் ஐயா நீங்கள். சட்டம்பியார் சட்டம்பியார் தான்" என்றார் சினத்துடன் லிகிதர். "பெரியவர் சென்ற கிழமை தான் இங்கு நியமனம் பெற்று வந்துள்ளார். அவர் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற்றைக் கவனிப்பவர். நீங்கள் அவருக்கு கோபத்தை மூட்டி மேலும் தாமதத்தை ஏற்படுத்தாமல் வீடு செல்லுங்கள்" எனக் கூறித் தனது அலுவல்களைக் கவனித்தார்.

வெளியே சென்று வாங்கில் ஏக்கத்துடன் அமர்ந்தேன். காரியாலய ஊழியர் ஒருவரும் அதில் இருந்தார், ஒரு பூனை வந்தது என் மேல் பார்வையைச் செலுத்தியது. "மியாவ்" என்று கத்தியது. அனுதாபத்தில் கத்தியதுபோல் தெரிந்தது. பின்பு எனக்கு அருகே உறங்கியது. நான் அதனைத் தடவினேன். எனது கண்ணீர், இரத்தக் கண்ணீர் பாய்வதனை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தினேன். "அடுத்தகிழமை உணவுக்கென்ன செய்வது" என்றவினா என்னை உற்றுப்பார்த்தது சில விநாடிக்குள் ஒரு ஜீப்வண்டி வந்துநின்றது. காரியாலய ஊழியரும் ஏனைய ஊழியர்களும் எழுந்து வணக்கம் செலுத்தினர். எங்கும் ஓரே அமைதி. நானும் எழுந்து கை கூப்பி வணக்கம் செலுத்தினேன். தனது அறையை நோக்கி நடந்தவர் திரும்பி என்னைப் பார்த்தார். அப் பார்வை தண்ணளி பெற்ற பார்வையாகத் தோன்றியது. உற்றுப்பார்த்தார். ஏதோ மர்மஉணர்வுகள் அலைமோதின. அவர் சென்றார். காரியாலய ஊழியரும் பின் சென்றார். நான் எனக்கு அண்மையில் இருந்த லிகிதரைப் பார்த்தேன். அவர் தானாகவே கூறினார். "இவர்தான் புதிய செயலாளர், கடுமையான பேர்வழி. வீண் பிதற்றலிற்கு இடம்கொடுக்க மாட்டார்." இதே சொற்களே பிரதம லிகிதராலும் முன்பு கூறப்பட்டவை ஆண்டவன் விட்ட வழிப்படி வாழ்வோம் என முணுமுணுத்துக்கொண்டு புறப்படுவதற்கு எழுந்தேன் அப்போது காரியாலய ஊழியன், 'ஐயா உங்களை பெரிஐயா வரட்டுமாம்" என அபூர்வ மரியாதையுடன் கூறினார். "என்னையா" என உறுதிப்படுத்துவதற்காகக் கேட்டேன். மீண்டும் அவ் ஊழியர் 'ஆம் ஐயா' என்றான்.

குழப்பமடைந்த நிலையில் பயத்துடனும் ஏக்கத்துடனும் உட்சென்றேன். கரம்கூப்பி வணக்கம் செய்தேன். 'தயவு செய்து அமருங்கள்' என்றார் உதவி செயலாளர் "உங்களுக்கு என்னவேண்டும்?" என்றுமிக அன்பாகவும், பணிவாகவும் என்னை வினவினார். எனது பதட்டம் தணிந்தது. 'நான் ஓர் ஆசிரியன். இளைப்பாறியுள்ளேன். இக் காரியாலயத்தை ஒருவருடமாக இடையிடையே தரிசித்து வருகிறேன். ஆனால் ஆனால்........" என்றேன். 'நீங்கள் துணிவாகக் கூறலாம்' என அவர் கூறி என்னை உற்சாகப்படுத்தினார் நான் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்காதமை பற்றிக் கூறினேன். மேலும் நான்கூறிய சொற்கள் மேசையின் மேலிருந்த மணியை அவர் அடித்த சத்தத்தில் அமைதியாகி விட்டன காரியாலய ஊழியன் விரைந்து வந்தான் பிரதம லிகிதரை அழைத்துவரும்படி கூறினார். சிலவினாடிக்குள் பிரதம லிகிதர் பதறியடித்துக் கொண்டு வந்தார். என்னைப் பார்த்த பார்வை நன்றாக இல்லை. நான் தயக்கம் அடைந்தேன். "ஏன் இவருடைய இளைப்பாற்றுச் சம்பளக் கோவை எனக்குப் போடப்படவில்லை" என வினவினார் உதவிச் செயலாளர்.

"ஐயா, இது பழைய சிக்கலான விடயம். சில பத்திரங்கள், விபரங்கள் இல்லாதமையால் பூரணப்படுத்தப்படவில்லை" என்றார் பிரதம லிகிதர். விழுங்கியும் விழுங்காமல் கூறினார்.

"இன்றே பூரணப்படுத்தி எனக்குக் கொடுங்கள்" என்றார் செயலாளர். 'ஆம் ஐயா, ஆனால் இவரின் சம்பளத்தைக் கணிக்கவேண்டும்' என்றார் பிரதம லிகிதர்.

'அதனை உடன் செய்யுங்கள்' என்றார் செயலாளர்.

'இதனைப்போல வேறு ஆறு விண்ணப்பங்கள் உண்டு' என்று தர்க்கித்தார் பிரதம லிகிதர்.

"பறவாயில்லை எல்லாவற்றையும் முடித்து இன்றே தாருங்கள். இந்தப் பெரியவருடைய பத்திரங்களை விரைவில் அனுப்புங்கள்' என்றார் செயலாளர். 'ஆம் ஐயா' என்று கூறிச்சென்ற பிரதம லிகிதர் நான் பீதியடையக்கூடிய பார்வையினை என்மீது செலுத்திச் சென்றார். நான் அவர் பின் செல்லுவதற்கு எழுந்தேன். ஆனால் செயலாளரினால் தடுக்கப்பட்டேன். கனிவான குரலில் "தயவு செய்து போவதற்குமுன் என்னை மீண்டும் சந்தித்து விட்டுச் செல்லுங்கள்" என்றார். "நிச்சயமாகச் சந்திக்கிறேன்" எனக் கூறி வணக்கம் செலுத்தி வெளியேறினேன். ஐந்து நிமிடங்களாக நடைபெற்றதனை எண்ணித் திகைத்துவிட்டேன்.

முழுக் காரியாலயத்திலும் வேலை விறுவிறுப்பாக நடைபெற்றது அரை மணித்தியாலத்திற்குள் எனதுகோவை செயலாளரின் கையொப்பத்திற்கு அனுப்பப்பட்டது. நான் பிரதம லிகிதருக்கு நன்றிகூறி செயலாளரைப் பார்ப்பதற்கு தயக்கத்துடன் கதவடியில் நின்று மெதுவாகத் தலையை நீட்டினேன். பொருத்தமான சொற்களால் நன்றி கூறிச் செல்லவேண்டுமென்று மனம் துடித்தது.

இனிய புன்முறுவலுடன் என்னை அழைத்தார். 'என்னை யார்என்று இனங்காண முடிகிறதா?' என்று அன்பாகவும் பணிவாகவும் கேட்டார் நான் கவனமாகப் பார்த்தேன், சிந்தனை அலைகள் பின்நோக்கி சிறகடித்துச் சென்றன. ஈற்றில் முடியவில்லை என்பதனைக் காட்டுவதற்குத் தலை அசைத்தேன். எனது வயது எனது ஞாபகத்தை மங்கச் செய்துவிட்டது" என்றேன். "உங்களது பெயர் அருணாசலம்" என்றார். நான் வியப்படைந்தேன். பிரதம லிகிதர் கூறிய வார்த்தைகள் மீண்டும் அலைமோதின. செயலாளர் தொடர்ந்து கூறினார். "ஐயா நான் அதிர்ஷ்டவசமாக ஏழாம் வகுப்பில் உங்கள் மாணவனாகப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. உங்களுக்கு இன்னும்

(10-ம் பக்கம் பார்க்க)

## குறுநாவல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மரஞ்செடிகளும் நீர்குடித்து அழகாகக் காட்சி தருகின்றன. கிராமத்துச் சுவர்களில் புதியபுதிய சித்திரங்களைத் தோற்றுவிக்கும் புதிய பரம்பரையினரின் வாசகங்கள் சுவரொட்டிகளாகக் காட்சிதருகின்றன.

காலம் மாறிவிட்டது மக்களும் எவ்வளவோ மாறிவிட்டார்கள். பழமை மரபுகளும் மூடக்கொள்கைகளும் மெல்ல மெல்ல மண்மூடிக்கொண்டு போகின்றன.

முருகேசம்மான் கோபம் தணிந்து சங்கருடன் மெதுவாகப் பேசிக்கொடுக்கிறார்.

'தம்பி'... சகோதரர்களும் கசக்க உழைச்சு உரமேறின உன்னைப்போல பொடியங்கள் இண்டைக்குக் கனோர் யாழ்ப்பாணத்திலே இருக்கினம். நீங்கள் மனந்தளராமல் உழைக்க கடைசியிலை உங்களுக்கும் ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடிக்கொள்ள வேணும். நீ இந்தமுறைபோய் உழைச்சுக் கொண்டு வா தம்பி. நான் இந்த ஊரிலை உனக்குத் தோதான ஒருநல்ல பெட்டையைப் பார்த்து வைக்கிறேன்...'

'நல்லது அம்மான் நான் கட்டாயம் திரும்பி வருவன். சொன்னதை மறந்து போகாதையுங்கோ...'

சங்கர் மறுபடியும் பயணமாகிவிட்டான். விமானம் மறுபடியும் ஊர்ந்து, வளைந்து, நேரான பாதையில் ஓடி மெதுவாக மெதுவாக உயர்ந்து உயர்ந்து உறுமிக்கொண்டே வானத்தில் மிதக்கிறது.

[முற்றும்]

## அத்வைத நவநீதம்

ஒன்றிலே ஒன்றினாளும்
ஒன்றன்மேல் ஒன்றினாளும்
ஒன்றிலே ஒன்றாய் ஒன்றும்
ஒன்றனை ஒன்றுவார்க்கு
ஒன்றதே ஒன்ற தாய
ஒன்றுமே ஒன்றும் ஒன்றாய்
ஒன்றிய ஒன்றை ஒன்றி
ஒன்றதாய் ஒன்றுவேனே

— கவிமணி ந. வீரமணிஐயர்

ஒன்றிலே ஒன்றினாளும் —
ஏகனாகிய சிவனிடம் சேர்ந்திருக்கும் பார்வதியும்
ஒன்றன்மேல் ஒன்றினாளும் —
சிவனின் ஜடாபாரத்தின்மேல்உள்ள கங்காதேவியும்,
ஒன்றிலே ஒன்றாய் —
ஒன்றும் ஒன்றனை சேர்ந்து ஒன்றிநிற்கும்இறைவனை
ஒன்றுவார்க்கு - சேர்பவர்களுக்கு
ஒன்றதே ஒன்றதாய ஒன்றுமே ஒன்றும் —
அத்துவிதக்கடந்த முத்திநிலை கைகூடும்
ஒன்றிய ஒன்றை ஒன்றி —
முத்திநிலை சேர்ந்துள்ள இறைவனை அடைந்து
ஒன்றதால் ஒன்றுவேனே —
இரண்டறக் கலந்து பேரின்பத்தைநுகர்வேனே

சுத்தமான
விளவு கற்பூரம்
சீனாவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனாவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப் பட்டது.
இப்பொழுது தாராளமாக கிடைக்கும்!
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு!
தொடர்பு கொள்ளவும்:
விநியோகஸ்தர்:
பிரபா ட்ரேடிங் கம்பெனி,
31-31A, கபோஸ் லேன், கொழும்பு-11.
Phone: 29426

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுஜனப் போராட்டமின்றி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கொடுமைகள் ஒவ்வொன்றும் துல்லியமான உதாரணங்களின் மூலம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படும் போதுதான் எமது போராட்டத்துக்கான உலகளாவிய ஆதரவைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் வளர்ச்சியடையும்.

## கண்மூடித்தனம்

வெகுஜனப் போராட்டங்கள் மூலம் எதிரிமீது மக்கள் வெறுப்பும், சினமும் கொள்வார்கள் ஆக்ரோசமும் அடைவார்கள். இதன்மூலம் அவர்கள் போராட்டங்களில் மேலும் நம்பிக்கை கொள்வார்கள்.

சில விடுதலை இயக்கங்களின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளின் மத்தியில் இத்தகைய வெகுஜனப் போராட்டங்களும் இல்லையாயின், தற்போதைய சூழலில் உள்ள போராட்டம் கூட மக்களிடமிருந்து முழுமையாக அன்னியப்பட்டுவிடும் இறுதியாகத் தமது கோரிக்கைகளிலிருந்தே மக்கள் தம்மை விலக்கிக் கொள்ள நேரிடும்.

உலகில் எந்தவொரு நாட்டை எடுத்துக்கொண்டாலும் வெகுஜனப்போராட்டங்கள் இல்லாமல் ஆயுதப் போராட்டங்கள் வெற்றியளித்ததில்லை இராணுவச் சதிகள் வேறு; போராட்டங்கள் வேறு இரண்டையும் ஒன்றாக நோக்கலாகாது.

## உதாரணங்கள்

சோவியத் ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சி நிலவுவதற்கு தொடர்ச்சியான வேலைநிறுத்தங்கள், மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் போன்ற பல்வேறுபட்ட வெகுஜனப் போராட்ட அம்சங்கள் உதவின.

கியூபாவில் கஸ்ரோவின் தலைமையிலான புரட்சிவெற்றியளிப்பதற்கு அங்கு தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ள கரும்புத்தோட்ட தொழிலாளர்களின் போராட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பன பெரும்பங்காற்றின.

ஈரானில் ஷாமன்னனையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் வீழ்த்திய புரட்சியில் 'மசூதி' களை மையமாகக் கொண்டெழுந்த ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், மற்றும் வெகுஜனப்போராட்டங்கள் அனைத்தும் இணைந்து வெற்றியை நிர்ணயித்தன.

## வரையறை வேண்டும்

இந்தவகையில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், மறியற் போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், உண்ணாவிரதங்கள் பகிஷ்கரிப்புக்கள் போன்ற வெகுஜனப் போராட்ட அம்சங்கள் அவ்வப்போதைய சூழ்நிலைக்கேற்பத் தெரிந்தெடுத்து பயன்படுத்துவதன்மூலம் போராட்டங்களை முன்னேற்ற உதவியாக இருக்கும்.

இதற்காக வெகுஜனப் போராட்டம் என்று கூறிக்கொண்டு அடிக்கடி ஹர்த்தால்களையும், பகிஷ்கரிப்புக்களையும் ஒழுங்கு செய்யக்கூடாது. அதற்குரிய வரையறைகளைக் கருத்திலெடுத்து தேவை கேற்பப் பயன்படுத்த வேண்டும்.

எனவே சரியானவழியில் முன்னெடுக்கப்படும் வெகுஜனப் போராட்டங்கள் மக்களை அவர்களதுபிரச்னைகளை வெளிப்படுத்த உதவும். எதிரியை கம்பலப்படுத்த உதவும்; எதிரிக்கு நெருக்கடிகளை எதிர்நோக்கச் செய்யும்; மொத்தத்தில் எமது போராட்டத்துக்கான பிரச்சாரத்தை முன்னெடுக்கவும், ஆதரவைப் பெறவும் உதவும்

சகோதரத்துவ உணர்வை வளர்க்கவும், பண்படவும் இத்தகைய வெகுஜனப் போராட்டங்கள் பெரும்பங்கு வகிக்கமுடியும்.

ஆதாரம்: 'தளிர்'

# சுதந்திரத்திற்குப்பகை மதுவும் தீண்டாமையும்

தென்னாபிரிக்காவில்மனித உரிமைகள் மீறப்பட்டபோது மனித இனம் கொடுமைக்கும் கொடூரத்துக்கும் ஆட்படுத்தப்பட்டபோது போராடி வந்திருந்த இந்திய மக்களின் அன்பை மாத்திரமல்ல ஆங்கிலேயர்களின் அன்பையும் ஆதரவையும் கூடச்சம்பாதித்த பெருமைக்குரியவர் காந்தியடிகள்.

இந்திய மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென்று விழைந்து போராடிய காந்தியடிகளின் உள்ளத்தில் இந்திய மக்களை சுதந்திரத்தைப் பெறுவதற்குச் சுதந்திரத்தை அனுபவிப்பதற்குமுரிய பக்குவமுடையவர்களாக மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. வெறும் சுதந்திரமும் ஆட்சி அதிகாரமும் உண்மையான சுதந்திர நோக்கங்களைப் பூர்த்தி செய்யாது என்பதே காந்தியடிகளின் கருத்தாகும். இந்தக்கருத்து எத்தகைய தீர்க்கதரிசனமானது என்பதை அண்மைக்காலங்களில் விடுதலைபெற்ற ஆபிரிக்கநாடுகளும் ஏன் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளும் கூட உணர்த்துகின்றன.

மக்களை சுதந்திரபுருஷர்களாக இருக்கப்பக்குவப்படுத்துவதற்காக காந்தியடிகள் மது ஒழிப்பு தீண்டாமை ஒழிப்பு, சுதேசியப் பொருட்பாவனை, பொருளாதாரத்தில் தன்னிறைவு போன்ற அம்சங்களை விடுதலைப் போராட்டத்திற்குச் சமாந்தரமாக முன்வைதார்

மது அருந்துதலை சமூகத்தில் இருந்து முற்றாக விரட்டியடிக்கவேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார் தமது பணத்தைச் கொடுத்து தாம் அருந்துகின்ற மதுவினால் தமது மதிநுட்பமும் மரியாதையும் பறிபோவதை உணராது மாற்தர்படும் துயரை நீக்காந்தியடிகள் விரும்பினார். விடுதலைப் போராட்டம் வீறுடு செயற்படவேண்டுமானால் மது ஒழிக்கப்படவேண்டும் என்று காந்தியடிகள் பிரசாரம் செய்தார். சட்டத்தால் ஒழிக்க முடியாத மதுவை தன் தத்துவக்கருத்துக்களாலும் வாய்மையாலும் காந்தியடிகள் விரட்டியடிக்க முனைந்தார் காந்தியடிகளின் பிரசார அலை அவர் வாழ்ந்த காலத்தில் இயங்கிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் போன்ற இயக்கங்களைக் கூட பி பற்றியது.

மதுப் பழக்கம் இன்னும் ஒழிக்கப்படாதிருப்பது மிகவும் வேதனைக்குரியதே. அவர் பிறந்த நாட்டிலே கூட மதுவிலக்கு பூரணமாக அமுல் நடத்தப்படாதிருப்பது அவமானமே. காலையில் இருந்து மாலைவரை கடினமாக உழைத்து நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தப் பாடுபட்டு விட்டு அவ் உழைப்பால் வரும் பணத்தை மதுவிலே செலவிட்டு தங்கள் மதியை மழுங்கடிக்க செய்யும் நமது சகோதரர்களை மாற்றியமைக்கவேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும் இன்று தமிழ் பேசும் மக்கள் மதுவால் தங்கள் மதி மயங்குவது மாத்திரமல்ல எவ்வளவு கோடி பணம் விரயமாகிறது என்பதையும் மதுவால் நமது பணம் மாற்றாரின் ''கஜானா''க்களை நிரப்புகிறது என்பதையும் நினைத்துப் பார்த்து காந்தியடிகளுக்குச் செய்கின்ற அஞ்சலியாகக் கருதி மதுவைக் கைவிடவேண்டும்

மூலைமுடுக்கெல்லாம் காந்தியின் பிரசாரம் வலுப்பெற்றது. பணக்காரர்கள் கூட தங்கள் பட்டான விதேசிய உடைகளை சந்திகளிலே போட்டுபகிரங்கமாக நெருப்பு வைத்தார்கள் கதராடைகளை அணிய வேண்டுமென்ற காந்தியடிகளும் வேண்டுகோளை தெய்வவாக்காகஇந்தியமக்கள் மதித்தார்கள்.

காந்தியடிகளை ஆத்மார்த்த தலைவனாகக் கொண்டு மதுவையும் தீண்டாமையையும் விரட்டுவோம்.

எஸ். கே. மகேந்திரன்
தலைவர், தமிழர் கலாசாரச் சங்கம்)

# காந்தி சொன்னார்: 'விடுதலை ஒருநாள் வரும்'

காந்தியடிகள் பிறந்தது 1869ம் ஆண்டு அவருக்கு 116 வயது பூர்த்தியாகிவிட்டது அந்தமும் ஆதியுமற்ற காலப் பரப்பில் காந்தியார் காலதேவனின் அழைப்பை ஏற்று இன்றைய வருடத்துடன் 37 வருடங்கள் பூர்த்தியடைந்து விட்டன

காந்தி அடிகளின் பிறப்பால் இந்த உலகமே நன்மையை அடையும் என அண்ணல் ராஜாஜி அவர்கள் 1912ல் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினார். அவர் அக்கூட்டத்தில் மேலும் கூறுகையில் பல்லாயிரமாண்டு மயக்கத்திற்குப் பிறகு ஒரு புதிய மனக்கிளர்ச்சியை எழுப்பி வாழ்விலே ஒரு புதிய முறையை உண்டாக்கியவர் காந்தி அடிகள் என்று குறிப்பிட்டார்.

கப்பலில் ஒரு வெள்ளைக்காரன் தினந்தோறும் வந்து காந்தி அடிகளைத் திட்டிவிட்டுப் போவது வழக்கம்- ஒருநாள் அவன் காந்தி அடிகளைப் பற்றிச் சில விரோதமானகவிதைகள் எழுதி அவரிடம் எடுத்துவந்தான். அவரிடம் கொடுத்தவுடன் அவர் அவைகளைக்கிழித்து குப்பைக் கூடையில் எறிந்து விட்டார் ஆனால் அவைகளில் குத்தப்பட்டிருந்த குண்டூசியை ஜாக்கிரதையாக எடுத்துதம் டப்பியில் வைத்துக் கொண்டார். அந்தவெள்ளைக்காரன் அவரிடம், ''காந்திபடித்துப்பாரேன் இதில் ஒன்றும் சாரம் இல்லையா?'' என்றான் அதற்கு அவர், ''ஆமாம், இருந்த சாரத்தை எடுத்து டப்பியில் வைத்துவிட்டேன்'' என்று பதிலளித்தார். இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். அவன் வெட்கத்தால் தலை குனிந்து போனான்.

காந்தி அடிகள் அரசாங்கத்தை எதிர்த்துப்பல போர்கள் நடத்தினார். பல தடவைகளில் அரசாங்கத்துடன் நெருங்கிப் பழகினார் இரண்டாவது உலகமகா யுத்தத்தின் ஆரம்பத்தில் காந்தி அடிகள் வெளியிட்ட அறிக்கையில் ''எனக்கு இப்பொழுது எனது நாட்டின் விடுதலைபற்றி எண்ணமே இல்லை. விடுதலை ஒரு நாள் வரத்தான் போகிறது ஆனால் இங்கிலாந்தும் பிரான்சும் அழிந்தாலும் சரி, அல்லது நேசநாடுகள் ஜேர்மனியை அழித்து வெற்றிபெற்றாலும் சரி விடுதலை தானாகவே கிடைக்கும் என்று கூறினார்.

காந்திஜி ஒருமுறைறலண்டனுக்குப் பேசும்போது

காந்தி அடிகள் பெற்ற புகழும், படைத்த பெருமையும், அடைந்த கீர்த்தியும் செல்வாக்கும் வேறெந்தச் சரித்திர மனிதனும் படைத்ததில்லை.

காந்தி அடிகள் காட்டிய வழியில் - அகிம்சை, சத்தியம் என்னும் பாதையில் - சென்று நல்லதோர் எதிர்காலத்தை அடைவோமாக.

துரைராசா மதிவண்ணன்
(அகில இலங்கை காந்திசேவா சங்கம்)

# எல்லைமீறிவிட்ட...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலின் இத்தாக்குதலைவிட, இதனை அமெரிக்க அதிபர் றீகன் வரவேற்றுள்ளதே உலகை ஆச்சரியத்திலும், கலக்கத்திலும் ஆழ்த்தியுள்ளது. உலகில் அதி சக்தி வாய்ந்த இராணுவ சாதனங்களைக் கொண்டுள்ள ஒரு நாட்டின் தலைவர் இத்தாக்குதலை வரவேற்றுள்ளதால் எதிர்காலம் எப்படியிருக்குமோ வென்பதே அக்கறைக்குமாகும்.

றீகனின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நோட்டமிடுபவர்களுக்கு அவர் ஒரு கோமாளித்தனமான பேர்வழி என்பது நன்கு புரியும்,

டுனீஸிய தாக்குதலை வரவேற்றுள்ளதைப் போன்று முன்பும் அவர் சில விதிவிலக்கான கருத்துக்களை வெளியிட்டுள்ளார் அவற்றில் ஒன்றே கடந்த ஆண்டு மே மாதம் மே ஜேர்மனியில் அரக்கத்தனமான நாஸிகளின் சேமக்காலையில் அவர்களை எதுவுமறியாத தவர்கள்' என்று றீகன் குறிப்பிட்டதாகும் இதன் மூலம் இன்று நாம் பரிவு காட்டி வரும் இஸ்ரேலிய யூதர்களின் கடும் கண்டனத்தைக் கூட அவர் பெற்றிருந்தார்

இதற்கு முன்பு ஒரு தடவை ஒலிபெருக்கி கருவியொன்றில் ''இப்போதுதான் ரஷ்யா மீது குண்டு போடும்படி பணித்துவிட்டு வந்துள்ளேன்'' என்று திரு றீகன் வாஷிங்டனில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயம் ஒலிப்பதிவுகளில் பதிவாகி பெரும் சர்ச்சையைக் கிளப்பிய வேளை, எனக்கு வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிக் கருவி முறையாக இயங்குகின்றதா என்பதைப்பார்க்கவே அப்படிக் கூறினேன் எனவே இவ்விடயத்தை சீரியஸாக' எடுக்க வேண்டாம்'' என்று அவர் சிரித்துச் சமாளித்தார்

எனவே டுனீஸியத் தாக்குதல் குறித்து றீகன் வெளியிட்டுள்ள கருத்து அவர் ஒரு 'முழுக்கோமாளி' என்பதை ஊர்ஜிதப்படுத்திவிட்டது.

இந்நிலையில் இஸ்ரேலின் எல்லை மீறிவிட்ட அடாவடித்தனங்கள் அமெரிக்காவின் கோமாளித்தனமாக கருத்துக்களால் ஊக்குவிக்கப்படுமானால் திரு றீகனும் அவரது சகாக்களும் மட்டும் குறிப்பிடும் 'பயங்கரவாதம்' என்ற நியாயமான மனிதஉணர்வுகள் வெளிக்கிளம்புமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

# சிறுகதை

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞாபகம் வரவில்லை? நான் 'இல்லை'' என மெதுவாகக் கூறினேன் ''மேலும் உங்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன் நான் வசதிப் பணம் செலுத்த வசதியில்லாத காரணத்தினால் பாடசாலைக்கு வரவில்லையென அறிந்ததும் எனது சகமாணவர் மூலம் அழைத்து பணத்தைச் செலுத்தி படிக்க வைத்தீர்கள். எனது தகப்பனார் கட்டிட வேலை செய்யும் பொழுது விபத்தில் சிக்கி வருமானம் இன்றி இருப்பதை அறிந்து வேண்டிய உதவிகள் செய்தீர்கள் என்னைத் தொடர்ந்து படிக்க ஆவன செய்தீர்கள்.''

''பின்பு நீங்கள் கிழக்கிலங்கைக்கு இடமாற்றப் பெற்றுச் சென்று விட்டீர்கள். அதற்குப் பின் உங்களைச் சந்திக்கவில்லை நான் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்றேன். எனது தந்தை மது அருந்துவதனைக் கைவிட்டார், எனது குடும்பம் சிறப்படையத் தொடங்கியது'' என மேலும் கூறினார். உணர்வுகள் கண்ணீர் மூலம் தம்மை வெளிக்காட்டத் தவறவில்லை நீங்கள் அன்றும் இன்றும் என்றும் என் நெஞ்சில ஓர் ஆசிரியன். இன்று உங்களால் நான் அமைச்சரின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றுகிறேன் நீங்கள் கூறிய புத்திமதிகள் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டன. உதாரணமாக நீங்கள் அடிக்கடி விதைத்த நல் எண்ண விதைகள் ''பிரார்த்தனையால் வெல்ல முடியாதவை ஒன்றுமில்லை'' எனக் கூறிக் கண்ணீர் சொரிந்தார். எனது பிரார்த்தனையால் நான் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தேன்

நினைவு அலைகள் பின்நோக்கச் சென்றன எல்லாம் கனவுபோல் காட்சி அளித்தன என்னால் பேசமுடியவில்லை. அன்று 12 வயதுப் பையனைத் தோளில் தட்டிக் கொடுத்து உற்சாகம் அளித்ததைப்போன்று கைகளை எனது உணர்விழந்து போட்டு விட்டேன். அவர் மகிழ்ச்சியடைந்தார் என் கைகளை முத்தமிட்டார். ''எழுத்தறிவித்தவன் இறைவன், ஆசிரியர்கட்கு இப்பொழுது சம்பளம் கொடுப்பதில் எவ்வித தாமதமும் ஏற்படாமலிருக்க ஆவன செய்கிறேன்'' என ஆணித்தரமாகக் கூறினார்.

எனதுவீட்டிற்குவருவதாகக் கூறிவழி அனுப்பி வைத்தார் புறப்பட்டேன். மேலும் உணர்வுகள் உதித்தன.

இன்றைய பத்திரிகையைப் பிரித்தால் அன்பும் பண்பும் கனிவும் கருணையும் எங்கோ ஓடி ஒளிந்து விட்டதுபோல் பரிதாப செய்திகளைத் தான் படிக்க முடிகின்றது. மனித உள்ளங்கள் பாலைவனங்களாக வரண்டு, போராட்டங்களிலும் கலவரங்களிலும் இருண்டு மனித குலத்தை அழிவு மயானத்திற்கு அழைத்துச் செல்லும் அவலத்தைத் தான் காணமுடிகின்றது. இன்றைய உலகில் இடபடியும் மனித உள்ளங்கள் இலாமல் இல்லை என்ற உணர்வுகள் ஏற்படுகின்றன

நான் காரியாலயத்தை விட்டுச் செல்லும் பொழுது நான் ஒரு வருடமாகக் காரியாலயத்திற்குச் செய்த புனித யாத்திரை வீண்போகவில்லை எனது பழைய மாணவன் கூறிய ''எனது நெஞ்சில் ஓர் ஆசிரியன்'' என்ற சொற்கள் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் பரம திருப்தியையும் கொடுத்தன ஆசிரியர்கள் அமைதியான புரட்சியாளர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தி என்னை மேலும் மகிழ்ச்சி அடையச் செய்தது இந்த உணர்வுகளின் உற்சாகத்தினால் இளமை பெற்று உஷாராக நடந்து சென்றேன். இவைகள் தான் நல்லாசிரியர்களுக்குக் கிடைக்கும் சன்மானங்கள்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு
(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இலக்கிய வட்டம் நடாத்தும் இலக்கிய கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் திரு. ஜீ. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும்.


## வெளிவந்துள்ளது
### விஞ்ஞானம்

புதிய GCE (O/L) டிசம்பர் 1985 மீட்டல் பயிற்சியும் மாதிரி வினாத்தாள்களும் - விடைகளுடன்.

பி. கே. பாலசிங்கம்
விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 1091

[illegible] மினி
"X" திரையிடல்
[illegible]-30, 12-30, 2-30 4-30, 6-30
## Chained Heat
அமெரிக்க பெண்களின் மறியல் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்.

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
## டார்லிங்
## Darling
## டார்லிங்
பாக்யராஜ்- பூர்ணிமா- ஜெயராம்- கல்லாப்பெட்டி சிங்காரம்
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30.
பாக்கியராஜ் - சுமதி நடித்த
### சுவரில்லாத சித்திரம்
(கலர்)

[illegible]
10-30, 2-30, 6-30
பாக்கியராஜ், பூர்ணிமா நடித்த
### நீங்கள் கேட்டவை
[illegible] கலர்

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
## TO RNADO
Last Hunter படத்தை விட சிறந்த விறுவிறுப்பான தாக்குதலைக் கொண்ட புதிய வெளியீடு

எம்பயர்
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-00
[illegible] 3 வேடம்
சரிதா நம்பியார், சத்யராஜ்
### எரிமலை
சினிமாஸ்கோப் புதிய வெளியீடு

லிபேர்ட்டி மினி
10-30, 2-30, 4-45 7-00
### FINAL MISSION
வயதுவந்தவர்கள் மட்டும்
விறுவிறுப்பான சண்டைகள் நிறைந்தது


## பணிவான வேண்டுகோள்

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் திரு பொன்னுத்துரை சண்முகலிங்கம் அவர்களால் புதிதாக நவீனமுறையில் ஒரு பாண்போறணை அமைக்க வெளிநாட்டிலிருந்து தருவித்து வைத்திருந்த இயந்திரங்களை 25-9-85 இரவு கொள்ளையடித்தவர்களை கண்டுபிடித்து பொருட்களை மீள ஒப்படைக்கச் செய்யுமாறு நேர்மையாக இயங்கும் சகல விடுதலை இயக்கங்களையும் பணிவுடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
கொக்குவில் மேற்கு பிரஜைகள் குழு
[1087]


PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,
## COMPUTER PROGRAMMING COURSES
for
Professionals and School Leavers (6 Months)
Classes Commence on 12th October, 1985
Lectures by: Mr. N. S. RAJAH, B Sc. (Eng), Hons. (London), A. M. I. C. E.
Saturdays:- 2-00 p. m. to 4-00 p. m.
Sundays:- 9-30 a. m. to 11-30 a. m.
REGISTRAR,
### Patrician Institute of Higher Studies,
59, St. PATRICK'S ROAD, JAFFNA.

## எம்மிடம் மீண்டும் ஒறிஜினல்
இளமை- ஆனந்பாபு, ஜீவிதா (பிரமிட்)
நீதியின் நிழல்- சிவாஜி, பிரபு, சுஜாதா (பிரமிட்)
கிருவ்ரர்- கமல், றஜனி, அமிர்தாபச்சன் (பிரமிட்)
## நியூவிக்ரேஸ்
### எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532
(1085)

## Computer Programming
and
## Data Processing Course
(BASIC LANGUAGE)
(6 Months)
Weekend Classes by Qualified and Experienced Panel of Lecturers
### Commencement:
### 27-10-85 at 10.00 a.m.
Fees Rs. 1500/-
Ideal for those who seek employment abroad.
### கன்ரேபியா கல்வி நிறுவனம்
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24201


## நீதியின்பேரில் கோரிக்கை

பல கஷ்டங்களுக்கு மத்தியில் மன்னார் குடிநீர் வழங்கல் அபிவிருத்தித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள எமது ஸ்தாபனத்திற்குச் சொந்தமான கிறேன்லொறி சென்ற 2-10-85 கடத்தப்பட்டுள்ளது. எமது திட்டத்தை குறித்தகால எல்லைக்குள் நிறைவேற்றி மன்னார் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவை நனவாக்க மேற்படி இவ்வாகனமும் இதற்கு முன்னர் கடத்தப்பட்ட 3 வாகனங்களும் அவசியதேவையாய் உள்ளன. எனவே அவ்வாகனங்கள் நான்கையும் உடனடியாகத் திரும்ப எம்மிடம் ஒப்படைக்குமாறு உருக்கமுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஊழியர்,
சாமுவேல் சன்ஸ்
[illegible]
[1103]


உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியில் பழுதில்லை
அன்ரனாவிலும் பழுதில்லை
ஒளிபரப்பியின் கோளாறுதான்
காட்சி தெளிவின்மைக்குக் காரணம்
## நெஷனல் ரெலிவிஷன்கள் றேடியோக்கள்
தரமான உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ள
## V. K. இராசரத்தினம்
(பிரதான விற்பனைப் பிரதிநிதி)
(KEY DEALER)
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
1090

## வீடியோ பிரசாத் ஸ்தாபனம்
## மீண்டும்
7-10-85 திங்கட்கிழமையிலிருந்து திறக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களிற்கு அன்புடன் அறியத்தருகிறோம்.
வீடியோ பிரசாத்,
49, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

## வகுப்புகள் — ஆங்கிலத்தில
- CEI — Parts I and II — CIVIL
- DIPLOMA IN DRAUGHTSMANSHIP
- DIPLOMA IN QUANTITY SURVEYING (LOCAL and CITY and GUILD — LONDON)
- DEPARTMENT EXAMINATION FOR INSPECTORS and ASST ENGINEERS

CLASSES

மேற்படி வகுப்புகள் எதிர்வரும் 23-10-85 ஆரம்பமாகவுள்ளன. 15-10-85 க்கு முன் விண்ணப்பிக்கவும்.
விபரத்திற்கு:
உயர்கலைக் கல்லூரி,
73, [illegible]. யாழ்ப்பாணம். [1053]

## ரக்ஸ் அன் எக்கவுண்டிங் சேவீசஸ்
## Tax and Accounting Services
கணக்குப்பதிவு, மற்றும் விற்பனைவரி, வருமானவரி தொடர்பான உதவிகளுக்கு
நேரடியாகவோ, தூர இடங்களில் உள்ளோர் கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.
பொது முகாமையாளர்.
32, மேல்மாடி,
பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்நகர். 1089


## உருக்கமான வேண்டுகோள்

கடந்த 3-10-85 வியாழக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நவீன ஆயுதபாணிகளான சில இளைஞர்கள், தாம் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி எமது இரு வீடுகளிலும் பிரவேசித்து எம்மைச் சித்திரவதை செய்து கஷ்டப்பட்ட பொதுமக்கள் எம்மிடம் தந்துவைத்த பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். இவ்வித கொள்ளைகளால் உண்மையான இயக்கங்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதுடன் பொதுமக்கள் வெறுப்பையும் இயக்கங்கள் சம்பாதிக்கும் நிலை உருவாகின்றது. இவ்வித பயங்கரங்களிலிருந்து எமது சமூகம் விடுதலை பெற்றால்தான் விடுதலை இயக்கங்களின் குறிக்கோளை அடைய முடியும். எனவே விடுதலை இயக்கங்களின் பெயரால் கொள்ளைகள் நடைபெறுவதை நிறுத்தவும் எமது பொருள்களைக் கொள்ளையடித்தவர்களைக் கண்டுபிடித்து பொதுமக்களின் அப்பொருட்களைக் கைப்பற்றி எம்மிடம் ஒப்படைக்குமாறும் புனித இயக்கங்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

க. தங்கம்மா.
த பாக்கியம்.

298, நாவலர் வீதி.
(கைலாச பிள்ளையார்கோவில் வேணி முன்பாக)
யாழ்ப்பாணம். (1098)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


“உடன்பாடு காண்பதில்

# போர் நிறுத்த மீறல்கள் தடையாக இருக்காது”

## —தொண்டமான்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண இலங்கை மக்கள் ஆவலோடு இருப்பதாக இலங்கை கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களுடன் பேசும் போதே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று காணும் போது, போர் நிறுத்த மீறல்கள் தடையாக இருக்கத் தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் சென்னையில் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரனையும், தமிழீழ விடுதலைப் போராளிக் குழுக்களின் தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடினார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்பட இந்தியா எடுத்து வரும் முயற்சிகளுக்கு உதவுமாறு இந்திய அரசு விடுத்த அழைப்பை ஏற்று தாம் இந்தியா வந்ததாகவும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடமிருந்து தாம் எவ்வித செய்தியையும் கொண்டு வரவில்லை என்றும் அமைச்சர் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினைகள் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டது என்றும், இலங்கை அரசுக்கும், தமிழ் அமைப்புகளுக்கும் இடையேயான எந்தவித உடன்படிக்கையிலும் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் சேர்க்கப்படக் கூடாதென்றும் அவர் கூறியுள்ளார். (து)

இணுவில் சம்பவத்தின் எதிரொலி:

# யாழ் மாவட்டத்தில் இன்று மினி பஸ் சேவை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இன்று பல பாதைகளில் மினிபஸ் சேவை நடைபெறாது. இணுவிலில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து மினிபஸ் ஒன்று சேதமாக்கப்பட்டதன் எதிரொலியாக இன்று மினிபஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ் காங்கேசன் துறை சேவையில் நேற்று முன்தினம் ஈடுபட்ட மினிபஸ் ஒன்று இணுவிலில் விபத்திற்குள்ளான போது ஒருவர் பலியானார். இதனைத் தொடர்ந்து அந்த மினிபஸ் பொதுமக்களால் சேதப்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இன்று 60 திகதி 769, 768, 770, 771, 775, 764 பாதைகளில் மினிபஸ் சேவையை நடத்துவதில்லையென யாழ். மாவட்ட தனியார் பேருந்து சங்கம் தீர்மானித்துள்ளது. (ஐ)

## ஈழம் செய்திப் பலகை

(யாழ்ப்பாணம்)

மலையகம் மலையக மக்களுடையது. மலையகமும் இணைந்த நிலப்பரப்பே ஈழம். மலையக மக்கள் ஈழமக்களே. மலையக மக்களுக்கான தீர்வு ஈழப் போராட்டத்துடன் இணைந்ததே. ஈழம் செய்திப் பலகையில் மேற்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது.

“ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) வெளியிட்டுவரும் இச் சுவரொட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காங்கேசன்துறை கடற்பகுதியில் பீரங்கி வேட்டுக்கள். மீனவர் பதற்றம் தொழில் பாதிப்பு என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## இலக்கிய வட்டம் இன்று கூடும்

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டக் கூட்டம் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் நீராவியடி பிரவுண் வீதியிலுள்ள செங்கை ஆழியான் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

சசிபாரதி தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் இலக்கியப் பேரவையின் பரிசுப்புத்தகத் தேர்வு மற்றும் இலக்கிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்படும். (ஐ)

## பாலுணவு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இவர்களுக்கு போதுமானளவு பாலுணவு வழங்கி உதவி செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

இக்குழந்தைகளில் பல ஏற்கனவே திருமலைப் பிரதேசப் பகுதிகளில் போதியளவு போஷாக்கின்மையால் பெருந்துன்பமடைந்ததும், சில குழந்தைகள் மரணமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் ‘யாழ். ரோட்டறி இன்ரரக்ட் கழக’ உறுப்பினர்கள் இந்த அகதிக் குழந்தைகளுக்கான பாலுணவு சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உதவிப்பணிக்கு உதவ விரும்பும் சகலரையும் தம்முடன் விரைந்து தொடர்பு கொள்ளுமாறு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இன்ரரக்ட் கழகத்தினர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை யாழ். அகதி முகாமுக்குப் போதிய குடிநீர் இல்லாமையினால் முகாம் முகாமையாளரின் வேண்டுகோளின் பேரில் யாழ். மாநகரசபை, குழாய்மூலமாக குடிநீர் வழங்கியுள்ளது.

இவ் அகதிமுகாமுக்கு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு சி. சிவகுருநாதன் நேற்று விஜயம் செய்து அகதிகளின் நிலவரங்களைக் கேட்டறிந்து, உணவு முத்திரைகளை வழங்கினார். மேலும் உதவிகளைச் செய்வதாகவும் தெரிவித்தார்.

‘மிக்கவர்’ ஸ்தாபனம் மலசலகூடத்துக்கான சலவைக் கற்களை வழங்கியுள்ளது. மலசலகூடத்தை தமது செலவில் கட்டித்தர பன்னாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா உறுதியளித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், லியோக்கழகம், அன்னையர் முன்னணி போன்ற பல ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் யாழ் அகதி முகாமுக்குச் சென்று உதவிகளைச் செய்து வருகின்றனர்.

‘பாண்’ போன்ற காலை உணவுகளை வழங்க விரும்புபவர்கள் யாழ். முகாம் முகாமையாளர் டாக்டர் ப. சுந்தரனுடன் தொடர்பு கொண்ட பின்பே அவற்றை வழங்குப்படி கேட்கப்படுகின்றனர். ஐ

## கிராமசேவையாளர் கட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மீராவோடை தமிழ்ப் பகுதி) கிராமசேவையாளர் க. பேரின்பம் (30வயது) இனந்தெரியாத இளைஞர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் தமது அலுவலகத்தில் இருந்த சமயமே கொல்லப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச் சாட்டு, மோசடி செய்தல் ஆகியவை காரணமாக இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## கிழக்கு ரயில் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கும் மட்டக்களப்பிற்குமிடையிலான ரயில் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இன்று காலை 6-15 இற்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் ரயில் பிற்பகல் 3-10 இற்கு மட்டக்களப்பை சென்றடையும்.

திருகோணமலை -கல்லோயா ரயில் சேவையும் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளது. (ச)

## சந்ததியாரை விடுதலை செய்யுமாறு சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சந்ததியாரை உடனடியாக விடுதலை செய்யக் கோரும் சுவரொட்டிகள், யாழ்நகரெங்கும் காணப்படுகிறன.

‘தீப்பொறி’ என்ற சுவரொட்டியின் கீழ் காணப்படுகிறது. மேற்படி சுவரொட்டியில் விடுதலை இயக்கம் ஒன்றும் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாருடையது

வடலியடைப்பைச் சேர்ந்த திரு பி. பிரேம் என்பவர் ஆனைக்கோட்டை கொக்குவில் சந்தியில் ஒருசிறிய கைப்பையினை இருதினங்களுக்கு முன்னர் கண்டெடுத்து ‘ஈழநாடு’ அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்

## திருமலை ஊழியர்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] வந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் தாங்களாகவே மீண்டும் அங்குசென்று வேலைசெய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென்று அவர்கள் முடிவு செய்யும்வரை அவர்களை தொடர்ந்து இங்குள்ள அலுவலகங்களில் [illegible] இணைப்புச் செய்யப்பட்ட [illegible] [illegible] (க)

## கசிப்பு விற்பனைக்கு சவுக்கடி தண்டனை!

(வேலணை)

வேலணையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட தாகக் கருதப்படும் பலரை விடுதலை இயக்கமொன்று கைதுசெய்து விசாரணை செய்தபின் சவுக்கடித் தண்டனை வழங்கியுள்ளது

புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளில் இக் கசிப்பு விற்பனை அதிக அளவில் நடைபெற்று வந்தது

இதனால் இப்பகுதிகளில் கசிப்பு குடித்தவர்களின் தொல்லைகளும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்ததனால் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் இடைஞ்சல்களும் தொல்லைகளும் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன.

இதனை உணர்ந்த விடுதலை இயக்கத்தினர் இவர்களை பிடித்துத் தண்டனை வழங்கியதன் பேரில் கசிப்பு விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது.

## இலங்கைப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது நிலவிவரும் வன்முறைச்சம்பவங்களை கண்டித்த அவர் இந்த வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என்றும் கூறினார்.

‘தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதபாணிகளாக இருப்பது குறித்து தமது கவலையைத் தெரிவித்துக்கொண்ட அவர் இலங்கை இனப்பிரச்சினை உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தாம் மனம்விட்டு கலந்துரையாடினதாகவும் கூறினார். (ரா)

## வத்தளை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தாம் அவ்வீட்டுக்கு முன்பாகவுள்ள கடையைச் சேர்ந்தவர்களென்றும், சமையல் செய்வதற்கு தமக்கு தீனைாய்த்தால் தரும்படியும் கேட்டனராம். அத்துடன் கதவு திறக்கப்படாவிட்டால் உள்ளே எப்படி வருவதென்று தமக்குத் தெரியுமெனவும் அவர்கள் பயமுறுத்தினராம்.

இதனையடுத்து ஜர்ஸலின் பிலிப் வீட்டின் பின்கதவைத் திறந்தபோது அதன்வழியே வந்த நபரொருவர் அவரது கழுத்தில் கைத்துப்பாக்கியால் அழுத்திச் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சூட்டுச் சம்பவத்தையடுத்து அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். கொலையுண்ட ஜர்ஸலின் பிலிப் யாழ்ப்பாணத்தில் கோப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவரையே திருமணம் செய்தவர். நீண்டகாலமாக கொழும்பில் வசித்து வரும் இவருக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கொலைச் சம்பவத்துக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பொலிசார் இச் சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கி)

## செயல் திட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தது. ஆனால் இந்த அறிக்கையில்கூட வடக்கு கிழக்கு இணைப்புக்குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஆகையினாலேயே இந்த அறிக்கை தமக்கு அதிருப்தியளித்துள்ளதாக சென்னையிலுள்ள தமிழ்க்குழுக்கள் அறிவித்துள்ளன.

இச்செயல்திட்ட அறிக்கையை ஆராய்ந்த தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், மின்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும் தமிழ்க் குழுக்களின் அதிருப்தியை ஏற்றனர், அத்துடன் இந்த அறிக்கையை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இவர்கள் உணர்த்துள்ளனர்

இதவேளை ஈ. தே. வி. மு. த. வி. கூ. ஆகியன இன்று புதுடில்லி புறப்படுகின்றனர். இவர்கள் இந்தியத் தலைவர்களிடம் தமது நிலையை விரிவாக எடுத்துக் கூறுவார்கள்.

திரு ரொமேஷ்பண்டாரி திருரஞ்சன் மத்தாயி ஆகியோர் செயல்திட்ட விபரங்கள் குறித்து தமிழ்க் குழுக்களுடன் கலந்தாலோசிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை சமர்ப்பித்துள்ள செயல்திட்ட அறிக்கைகுறித்து அதிருப்தி தெரிவித்துள்ள அதேவேளை வடக்கு—கிழக்கு இணைப்புக் குறித்த புதிய செயல்திட்ட அறிக்கையொன்றைத் தமிழ்க் குழுக்கள் எதிர்பார்க்கின்றன. அத்தகைய புதிய அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலிக்க அவை தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறை வேலாயுதபிள்ளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த யாழ் செண்ட்ஜோன் அம்புலன்ஸ் பிரிவின் முதலுதவிச் செய்முறைப்போட்டியும், இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த அணிவகுப்பு நிகழ்ச்சியும், தவிர்க்க முடியாத காரணங்களினால் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது என்பதை யாழ். பிரதேச ஆணையாளர் வைத்திய கலாநிதி சுந்தரன் இன்று தம்பி தெரிவித்துள்ளார்.


WANTED
VOLKSWAGON 1200

5 Sri க்கு அதற்குப்பிந்திய மிக நல்ல நிலையிலுள்ள வோக்ஸ்வகன் 1200 கார் தேவை 12 Volt எதிர்பார்க்கும் விலை; காரின் சரியான நம்பர் ஆகிய விபரங்களையும் விண்ணப்பிக்கவும். இலக்கம் 1109 C/o. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 1109


இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் அச்சகத்தினரால் [illegible] 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389—24186

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org